# வீதிவிபத்து வருடந்தோறும் ஆயிரக்கணக்கில்


Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15 ★★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 12
இதழ் 217
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 31 றஜப் 14 புதன்கிழமை (16-9-70)



நவநாகரீக நகைகளுக்கு

ஹரன் ஜுவல்லர்ஸ்
50, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்
போன்: 444 தந்தி: 'இரத்தினம்ஸ்'

உரிமையாளர்: க. கிருபாகரன்
இரத்தினம் ஆபரண மாளிகை
உரிமையாளர் (காலஞ்சென்ற)
திரு. K. V. கனகரத்தினம் J. P.
அவர்களின் மருமகன்


# அதிகரிப்பு!

## இவ்வருடம் 6 மாதத்தில் 7838 விபத்துக்கள்

கோட்டை, செவ்வாய்

**வீதி விபத்துக்கள் வருடாவருடம் அதிகரித்து வருவதால், அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் பொலிசார் துரிதமாக ஈடுபடுத்தப்படவுள்ளனர்.**

**விபத்துக்களைத் தடுப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா சகல பிராந்திய பொலிஸ் அதிபர்களுக்கும் பொறுப்பதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.**

1966'ம் ஆண்டு 13,592 விபத்துக்கள் நடைபெற்றதாகவும், இதில் 6788 பேர் காயமடைந்ததாகவும், 487 பேர் மாண்டதாகவும் பொலிஸ் புள்ளி விபரம் கூறுகிறது.

1967-ம் ஆண்டில் 14,498 வீதி விபத்துக்கள் நடைபெற்றதால் 7224பேர் காயமுற்றதாகவும், 546 பேர் பலியானதாகவும் புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

1968-ம் ஆண்டு 14,549 விபத்துக்கள் நடைபெற்றன இதில் 7739 பேர் காயமடைந்தனர். 598பேர் மாண்டனர். 1969-ம் ஆண்டில் 17,038 விபத்துக்கள் நடந்தன. 8903 பேர் காயமடைந்தனர். 621 பேர் பலியாகினர் என்றும் பொலிஸ் புள்ளி விபரம் கூறுகிறது.

இவ்வாண்டு முதல் 6 மாத காலத்திலும் 7,835 விபத்துக்கள் நடைபெற்றன. இதில் 4824 பேர் காயமடைந்தனர். 266 பேர் பலியாகினர் என்றும் நாளாந்தம் வீதிவிபத்துக்கள் நாட்டில் அதிகரித்து வருவதாகவும் பொலிஸ் புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

வாகன சாரதிகளும் சைக்கிளோட்டிகளும் வீதி ஒழுங்கு முறைகளைக் கவனித்து நடப்பதில்லை, அத்துடன் வீதிகள் அமைப்பதில் உள்ள பொறியியல் முறைத்தவறு, வீதிகளில் மின்சார விளக்குகள் இல்லாமலிருப்பது போன்ற காரணங்களே வீதி விபத்து அதிகரிப்புக்குக் காரணமென பொலிஸ் அறிக்கை கூறுகிறது.

வீதி ஒழுங்கு முறைப் பயிற்சி வகுப்புக்களை ஒவ்வொரு போயாவுக்கும் முன்தினம் நடாத்துமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அறிவித்துள்ளார். கொழும்பு தலைமைக் காரியாலய போக்குவரத்துக் கிளையில் போயாவுக்கு முன்தினம் காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை இவ்வகுப்புகள் நடைபெறும். வானொலி மூலமும் இதுசம்பந்தமான ஒலிபரப்பு நடாத்தப்படுகிறது.

பொதுமக்கள் வீதிஒழுங்கு முறைகளை அனுசரிப்பதன் மூலம் வீதி விபத்துக்களைக் குறைக்கலாம் என்றும். இ. போ. ச. பஸ் சாரதிகள், ராக்ஸி சாரதிகள் ஏனைய வாகன சாரதிகள் வீதி ஒழுங்கு முறைகளைக் கட்டுப்பாட்டுடன் அனுசரித்து நடக்குமாறும் பொலிஸ் அதிபர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## அரசியல் சாஸன தமிழ் மகாநாடு

# முன்னாள் தீவுப்பகுதி எம். பி. வெளிநடப்பு செய்தார்

## கூட்டாட்சி கட்சியினர் கலந்து கொள்ளவில்லை

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்று புதிய அரசியல் சாஸனம் பற்றி ஆராய்வதற்காக நடைபெற்ற தமிழ்மகாநாட்டில் கலந்து கொண்ட சுயாட்சிக் கழக தலைவரும் முன்னாள் ஊர்காவற்றுறை எம். பி. யுமான திரு. வி. நவரத்தினம் பத்துநிமிடத்தின் பின் வெளிநடப்புச் செய்தார்: தீர்மானங்களைத் தவிர்ந்த வேறு விஷயங்கள் பற்றிப் பேச மாநாட்டுத் தலைவர் அனுமதியளிக்காததை தொடர்ந்து அவர் வெளியேறினார்.**

முன்னாள் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, சமசமாஜ கட்சி,கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த

டி டபிள்யூ தேவநாயகம், செனட்டர் எஸ் நடராசா, முன்னாள் மாவட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், மட்டக்களப்பு

பொதுச்சேவைக் கமிஷன் பற்றி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானமும் வாபஸ் பெறப்பட்டது, மற்றும் 8 [illegible] மானங்கள் ஏகமனதா[illegible]

## வீடு தீயில் சாம்பர்;

மாவிட்டபுரம், செவ்வாய்

சிறு பிள்ளைகளின் விளையாட்டு வீட்டைச் சாம்பராக்கியது. தெய்வாதீனமாக அச்சிறுவர்கள் உயிர் பிழைத்துக் கொண்டனர். குப்பிவிளக்குடன் அவர்கள் விளையாடியதைத் தொடர்ந்து அவர்களது வீடே சாம்பரானது.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளியான திரு எஸ் அருணாசலமும் அவரதுமனைவியும் வெளியே சென்றிருந்தசமயம் சிறு பிள்ளைகள் குப்பி விளக்கில் விளையாடினர். இதன் பயனாக வீட்டில் நெருப்புப் பிடித்து வீடு முழுவதும் சாம்ப

## டிசம்பரில் பாகிஸ்தான் தேர்தல்

ராவல்பிண்டி செப் 15

பாகிஸ்தான் பொதுத்தேர்தல் இவ்வாண்டு டிசம்பா மாதத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

இத்தோதலில் இராணுவ நீதிமன்றந்தி[illegible] ஆண்டு சிறைத்தண்ட[illegible] பெற்றவர் பங்குகொள்ள முடியாதென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

இவ்வுத்தரவினால் பல அரசியல் தலைவர்க[illegible] பங்குகொள்ள முடியாதுபோய்விடுமெ

## "புதிய அரசியல் சாஸனத்தில்

# ஓரினம், ஒருமொழி, ஒருமதம் என்பவற்றுக்கு இடமளியாதீர்"

## இலங்கை ஹரிஜன யூனியன் மகஜர்

கோட்டை, செவ்

உலக மக்களின் நல்வாழ்வுக்கு உத்தரவாதமளித்துள்ளது சோஷலிசசமதர்ம ஆட்சியாகும். இது மக்களை

ஆர் டி சில்வாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரொன்றில் இவ்வாறு கேட்டுள்ளது

தேர்தல்சம்பந்தமாக தற்

ரில் கோரப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் கூறப்பட்டிருக்கும் யோசனைகளில் சில வருமாறு:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

தொடர்ந்து அவர் வெளியேறினுர்.

முன்னுள் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. தமிழரசு, தமிழ் காங்கிரஸ், யூ என். பி எம். பிக்களும் வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த பிரமுகர்களும், முன்னுள் எம். பிக்களும், ஹட்டன், பதுளை, கொழும்பு பகுதிகளிலிருந்தும் சுமார் 60 பேர் கலந்து கொண்டனர்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம், தமிழரசு தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம், இருவரும் கலந்து கொள்ளவில்லை. தமிழரசு கட்சி பொதுக் காரியதரிசி திரு ஏ அமிர்தலிங்கம், தமிழ்க் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு எம் சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காங்கேசன்துறை எம் பி திரு எஸ் ஜே வி செல்வநாயகம், சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம், கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை, உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம், நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம், கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி, கற்குடா எம் பி திரு டி டபிள்யூ தேவநாயகம், செனட்டர் எஸ் நடராசா, முன்னுள் மாவட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், மட்டக்களப்பு மேயர் திரு எஸ் திசவீரசிங்கி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆட்சிமன்றத்தின் ஆயுள் காலம் 5 வருடமாக இருக்க வேண்டும் என தமிழ்க் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு. எம். சிவசிதம்பரம் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது

ஜனுதிபதி தெரிவு பற்றிய தீர்மானம் பற்றி பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன அதிகாரம் யாரிடம் இருக்கும் என அறியாமல் இதுபற்றி தீர்மானிப்பது சரியல்லவென சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கூறினுர்.

ஜனுதிபதியை மக்கள்தான் தெரிவு செய்யவேண்டுமென்று நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம் கூறினுர். இத்தீர்மானத்தை வாபஸ் பெறுவது நல்லதென முன்னுள் உடுப்பிட்டி எம். பி. திரு. எம் சிவசிதம்பரம் கூறினுர். சபையில் பெரும்பாலானேர் தீர்மானத்தை வாபஸ் பெற விரும்பியதால் ஜனுதிபதி தெரிவு பற்றிய தீர்மானம் வாபஸ் பெறப்பட்டது.

பொதுச்சேவைக் கமிஷன் பற்றி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானமும் வாபஸ் பெறப்பட்டது. மற்றும் 8 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

திரு எஸ் அருணுசலமும் அவரது மனைவியும் வெளியே சென்றிருந்தசமயம் சிறு பிள்ளைகள் குப்பி விளக்கில் விளையாடினராம் இதன் பயனுக வீட்டில் நெருப்புப் பிடித்து வீடு முழுவதும் சாம்பராகியது. இதுகுறித்துகிராம சேவையாளருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

சிறைத்தண்டனை பெற்றவர் பங்குகொள்ள முடியாதென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

இவ்வுத்தரவினால் பல அரசியல் தலைவர்கள் பங்குகொள்ள முடியாதுபோய்விடுமென்பதால் தலைவர்களும்செய்திப் பத்திரிகைகளும் கண்டனம் தெரிவித்துள்ளது.

# கச்சேரிகள் மூலம் சுகாதார பிரச்னைகளுக்குத் தீர்வு

## சுகாதார அமைச்சரின் புதிய திட்டம்

கோட்டை, புதன்

சுகாதார பிரச்னைகளைக் கச்சேரிகள் மூலமாக ஒழிப்பதற்குப் புதியதொரு திட்டத்தைச் சுகாதார அமைச்சர் திரு ஆரியதாசா வகுத்துள்ளார்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு கச்சேரிகளிலும் கூட்டம் நாடாத்தி அவ்வப் பகுதிச் சுகாதார பிரச்னைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதே அமைச்சரின் நோக்கமாகும் ஒவ்வொரு கச்சேரியிலும் நடைபெறும் கூட்டத்திற்கு சுகாதார அமைச்சரே தலைமை தாங்குவார். அவ்வத் தொகுதி ஆட்சிமன்ற பிரதிநிதிகள் சுகாதார அதிகாரிகள், மற்றும் சுகாதார சேவையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி ஆகியோர் இக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருப்பார்.

அமைச்சர் இவர்கள் மூலம் அவ்வப்பகுதி சுகாதார சேவைகளை ஆராய்ந்து அவற்றிற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை கூறுவார் இத்தகைய முதல் கூட்டம் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி பதுளை கச்சேரியில் நடைபெறவிருக்கிறது.

# ஜனுதிபதி பொம்பிடோவை ஸ்ரீமா இன்று சந்திக்கிருர்!

பாரிஸ், செப். 15

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமது பாரிஸ் விஜயத்தின் இரண்டாவது நாளான இன்று பிரான்ஸ் வெளிநாட்டமைச்சர் திரு. ஹியூமனை சந்தித்துப் பேசினுர். நாளை மறுதினம் ஜனுதிபதி திரு. பொம்பிடோவைச் சந்திக்கிருர்.

இன்று அவர் வெளிநாட்டமைச்சரை சந்திப்பதற்கு முன்பதாக யுத்தத்தில் உயிர் நீத்த போர்வீரர்களுக்குச் சிவப்பு மலர் வளையங்களைச் சாத்திஞர்.

கண்டிய கைத்தறிச் சேலையைப் பிரதமர் ஸ்ரீமாவோ அணிந்திருந்தார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் பிரான்ஸ் வெளிநாட்டமைச்சர் திரு. ஹியூமனுக்கும் இடையில் நாளை தொடர்ந்து பேச்சு வார்த்தை நடைபெறும்.



இலங்கையின் மீன்பிடித் தொழிலை விஸ்தரித்தல் அதைமேலும் நவீனமயமாக்குதல் குறித்தும் அதற்குப் பிரான்ஸ் அரசின் உதவியை கோரியும் பிரதமர், வெளிநாட்டமைச்சர் திரு. ஹியூமனுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். பேச்சுவார்த்தை நடாத்தும்போது பிரதமரது குழுவில் பேராசிரியர் ஏச். ஏ. டி. குணசேகராவும் இடம்பெறுவாரெனத் தெரிகிறது. தென்கிழக்காசியப் பிரச்னைகள், லுசாக்கா மகாநாடு ஆகியனவும் இவர்களது பேச்சுவார்த்தையில் இடம்பெறுமென மேற்படி அதிகாரி தெரிவித்துள்ளார்.

திருமதி பண்டாரநாயக்கா இலங்கைக்கும், பிரான்ஸுக்குமிடையில் பண்டமாற்று வர்த்தகமுறையை ஏற்படுத்துவது குறித்தும் மேற்படி பேச்சு வார்த்தையின்போது ஆராய்வாரெனத் தெரியவருகிறது.

பேச்சுவார்த்தையின் பின் பின்னர் பிரான்ஸின் கைத்தொழில் அதிபர்களையும் பிரதமர் சந்திப்பார்.

# பலாலி

# கனிஷ்ட பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு எதிர்ப்பு

மாவிட்டபுரம், செவ்வாய்

**பலாலி சேர் பொன் இராமநாதன் கனிஷ்டபல்கலைக்கழகத்தை மூடவோ அல்லது அவ்விடத்திலிருந்து அகற்றவோ கூடாதென அரசாங்கத்தை வற்புறுத்தும் கோரிக்கைகள் வலுவடைந்து வருகின்றன. பல உள்ளூராட்சிமன்றங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றி சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பிவருகின்றன.**

மயிலிட்டி கிராமசபையின் அவசர கூட்டமொன்றில் பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்தை இடமாற்றம் செய்வதானுல் அவ்விடத்தில் ''பொலி ரெக்னிக்'' கல்லூரியையாவது நிறுவ வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி கல்வியமைச்சருக்கு அனுப்பியுள்ளது.

அச்சுவேலி கிராமசபையும் சங்கானை கிராமசபையும் இப்பல்கலைக்கழகத்தை மூடக்கூடாது எனகல்வி அமைச்சரிடம் அவசரதந்தி மூலம் கேட்டுக்கொண்டுள்ளன.

இம்மாதம் 16-ம் திகதி காங்கேசன்துறை பட்டின சபையிலும் 18-ம் திகதி மல்லாகம் கிராமசபையிலும் இப்பல்கலைக்கழகத்தை மூட வேண்டாம் என்றுகோரும் பிரேரணை விவாதிக்கப்படவிருக்கிறது.

வசாவிளான் பலாலி கிராமமுன்னேற்ற சங்கம் இதுசம்பந்தமாக கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் அதை மூடிவிடவேண்டாம் எனக் கேட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தை மூடுவதினுல் அங்கு கல்விபயின்றுகொண்டிருக்கும் மாணவர்கள் மிகவும் அவதிக்குள்ளாவார்கள் என மாணவர்கள் சிலர் கல்வியமைச்சரைச்சந்தித்து விளக்கவிருக்கின்றனர். மகஜர் ஒன்றையும் இவர்கள்அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

## உற்சவம்

மாவிட்டபுரம், செவ்.

மயிலிட்டி தெற்கு கட்டுவன் தண்ணித்தாழ்வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகவிருக்கிறது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் மயிலிட்டி தெற்கு இந்து சமய விருத்திச்சங்க ஆதரவில் சைவப்பிரசங்கங்களும் கூட்டுப்பிரார்த்தனைகளும் இடம் பெறும்.

# இலங்கை ஹரிஜன யூனியன் மகஜர்

கோட்டை, செவ்

உலக மக்களின் நல்வாழ்வுக்கு உத்தரவாதமளித்துள்ளது சோஷலிசசமதர்ம ஆட்சியாகும். இது மக்களை பெரும்பான்மை சிறுபான்மையெனப் பிளவுபடுத்துவதில்லை. மொழிவேற்றுமைப் பிதற்றலை நம்புவதில்லை. மத வித்தியாசத்தை நம்புவதில்லை ஏனெனில் இவ்வகையான சமுதாய வேற்றுமைகள் விதேசி, சுதேசி அதிகார வர்க்கத்தினரின் பாதுகாப்பு அரண்களென்பதை உண்மையான சமதர்மவாதிகள் நன்கறிந்துள்ளனர், எனவே உருவாக்கப்படும் அரசியல் சாசனம் ஓரினம், ஒருமொழி, ஒருமதம் என்பவைகட்கு முரணுனது எனும் உண்மை பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்'

இலங்கை ஹரிஜன யூனியன் அரசியல் சட்ட அலுவல்கள் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வாவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் இவ்வாறு கேட்டுள்ளது

தேர்தல்சம்பந்தமாக தற்போதைய காலஎல்லை விரும்பத்தக்கது என்றும், சுதந்திரமான தேர்தல்கட்கு உத்தரவாதமளிக்கப்படல் வேண்டும் என்றும் தற்போதைய தேர்தல் ஒழுங்குவிதிகள் சிறந்தவை என்றும் அபேட்சகரோ, கட்சியோ, இன, மத மொழி அல்லது வேறெந்த வித வேறுபாடுகளை தேர்தல் விஞ்ஞாபனங்களில், துண்டு பிரசுரங்களில், பிரசாரங்களில் வெளியிடுவது முற்ருக சட்டவிரோத மாக்கப்படல் வேண்டும் என்றும் மகஜரில் கூறப்பட்டுள்ளது

இன மத மொழி கலாச்சாரம், பாரம்பரியங்கள் ஆதியன ஓரினத்தின் பிறப்புரிமைகளாகும், இவைஎவ்வித அதிகார ஆதிக்கத்திற்கும் கட்டுப்படாத பூரண சுதந்திரமாகவளரும் இயல்புடையவை, இதன் இரத்தநாடி தான் ஓரினத்தின் தாய் மொழி, அதுவே அவ்வினப் பிள்ளைகளின் போதனு மொழியாதல்வேண்டும் இது பிறப்புரிமைக்குட்பட்ட ஆதிபத்திய உரிமையாகும் இந்த ஜீவாதாரமான உரிமைகளை அரசியல் ஆதிக்க பலத்தால் மாற்ற அல்லது அளிக்க எச்சக்தியாலும் முடியாதென்னும் நிரந்தர பாதுகாப்பு விதி வகுக்கப்படும் அரசியல் சாசனத்தில் இடம்பெற வேண்டியது அத்தியாவசியமாகு என்றும், உழைக்கும் வயதுவந்தோரின் கல்விக்கு திறமைக்கேற்ப அரசாங்க தனியார் துறைகளில் எவ்விததடையோ பாகுபாடோ இன்றிஎல்லோரும் தொழில் பெறுவதற்கான உத்தரவாதமளிக்கப்பட வேண்டும் ஒவ்வொருவரும் தன் வாழ்வை தானே நிர்ணயித்துக்கொள்வதற்கான வாழ்வுச் சுதந்திரம் பொதுவாக்கப்படல் வேண்டும் என்றும் பிரஜைகள் எல்லோரும் இன, மத, மொழி பேதம் இன்றி, வம்சாவழி, பதிவுப் பிரஜைகள் எனும் ஏற்றத் தாழ்வுகள் எந்த ரூபத்திலும் தலைகாட்ட விடக்கூடாது. எல்லோரும் சட்டரீதியான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுகொள்ளப் பூரண சுதந்திரம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். இதில் மாறிவரும் அரசாங்கங்களின் பயமுறுத்தல்கள், நிர்ப்பந்தங்கள். எவருக்கு எதிராகவும் இருக்கவிடக்கூடாது. பேச்சு, எண்ணம், எழுத்து, பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவைகளுக்குச் சட்ட மூலம் நிரந்தரமான பாதுகாப்பு அளிக்கப்படல் வேண்டும்'' என்றும் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் கூறப்பட்டிருக்கும் யோசனைகளில் சில வருமாறு:

உத்தேச 'சோஷலிஸ்ட்' மக்கள் குடியரசின் ஒளி விளக்கு, நீதிபரிபாலனமாகும். அது பலம் பொருந்திய பூரண சுதந்திரமுடையதாகும். இரு பெரும் தேசிய இனங்களின் மொழிகளான சிங்களமும், தமிழும் நீதிமன்ற மொழிகளாக்கப்படல் வேண்டும். ஆங்கிலத்தை எதிர்க்காதவர்கள் ஏன் சிங்கள மொழிக்கு உட்படக்கூடாதெனும் வாதம் நேர்மையான சோஷலிஸ தர்மத்திற்கு மாருனது. நீதிமன்றங்களில் தமிழ் இடம் பெற்றுத் தேசிய ஒருமைப்பாடு பலமடைந்து மக்களது சௌஜன்ய வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும்

மனிதர்க்கு மனிதர் தொழில் அல்லது வேறெவ்வித பாகுபாடு காட்டுவது அல்லது அரசாங்க அனுமதி பெற்ற பொது இடங்களில் சாதித் துவேஷத் தடைவிதிப்பது சட்ட மூலம் கடும் தண்டனைக்குரிய குற்றங்களாக்கப்படல்வேண்டும்.

குறிப்பாக வடபகுதியில் உள்ள சைவாலயங்களில் ஆலய வழிபாட்டுச் சுதந்திரம் சட்ட மூலம் ஹரிஜனங்கள் பெறுவதற்கு ஆவன செய்யப்படல்வேண்டும். மத வழிபாட்டுச் சுதந்திரத்தை தடுப்போர், எதிர்ப்பைத் தூண்டுவோர், பிரச்சாரம் செய்வோருக்குக் குறைந்தது ஐந்து ஆண்டு கடூழியச் சிறையுடன், சகல குடியியல் உரிமைகளும் பறிமுதலாக்கப்படுவதே இதற்கு நிலையான பரிகாரமாகும்.

## இலவசம்!

### மாபெரும் உதைபந்தாட்டம்

'ஈழநாடு' ஆதரவிலான மாபெரும் உதைபந்தாட்டப்போட்டி இன்றுமாலை யாழ் விளையாட்டரங்கில் நடைபெறும் யாழ் பொலிஸ் விளையாட்டு வார விழாவை முன்னிட்டு இவ்வுதைபந்தாட்டப்போட்டி இலவசமாகவே நடைபெறுகிறது. ஈழத்தின் பிரபலஇருகோஷ்டிகள் மோதுகின்றன!

(விபரம்2-ம்பக்கம்)

## தேர்தல்

திருவனந்தபுரம், செவ்

கேரளத்தில் வியாழக்கிழமைதேர்தல் நடைபெறவிருக்கிறது

இன்றுடன் தேர்தல் பிரசாரம் முடிவடைந்தது 133 இடங்களுக்கு 473 பேர் போட்டியிடுகின்றனர்

## விமானங்களில் ஆயுதம் தாங்கிய காவலர்!

லண்டன், செப்

சுவிஸ் விமானப்சேவைப்பகுதியிலிருந்து விமானங்களில் ஆயுதம்தாங்கிய காவல் படையினரை வைக்கமுடிவு செய்துள்ளது

அமெரிக்காவிலும் இந்த வழியை பின்பற்றி விமானங்களில் ஆயுதம்தாங்கிய காவலர்கள் அமர்த்தப்படுவார்கள்

இதற்காக புதிதாக 2500 காவலர்கள் அமெரிக்கா நியமனஞ் செய்துள்ளது ஏறக்குறைய 2 கோடி 80 லட்சம் டாலர்களை இதற்காக அமெரிக்கா செலவிடவிருக்கின்றதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பெர்குஷன் டிறக்ரர் 12 ஆணிப்பெண்டி ஒன்றும் றில்லர் ஒன்றும் உடனே விற்பனைக்குண்டு. ஜஞ செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, சண்டாவளை. 2938

### WANTED

Reference Advertisement in Eelanadu of 28-8-70 for training as Laboratory Technologists minimum qualification amended to read as S. S. C. English or G.C.E. (O.L.) with English as a subject and Credit passes in Chemistry and one of the following subjects: Physics, Botany, Zoology or Biology. Closing date extended up to 18-9-70 President, Co-op. Hospital, Moolai. 2453


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-25 இசைப்பயிற்சி, 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 செய்திச் சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித்தொகுப்பு.

— —

## யாருடையது?

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர்வீதியில் கண்டெடுக்கப்பட்ட திறப்பு ஒன்றை எஸ் இராசத்தினம் என்பவர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் வந்துபெற்றுக் கொள்ளலாம்.


## கேள்விப் பத்திர அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகரசபை

### அச்சடிக்கப்பட்ட படிவங்களும் றிஜிஸ்டர்களும்

1971-ம் ஆண்டுக்கான றிஜிஸ்டர்கள் லெஜர்கள், படிவங்கள் முதலியவை அச்சடித்து வழங்குவதற்கான சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 5-10-1970 நண்பகல் 12 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். (மாதிரிப் படிவங்களை எனது காரியாலயத்தில் பார்வையிடலாம்) திருப்பிக் கொடுக்கும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/-ம், திரும்பப் பெற முடியாத கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 5/-ம் செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்களை 30-9-1970-ம் திகதி பிற்பகல் 3-00 மணி வரை எனக்கு மனுப்பண்ணுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் பிரதியுடன் இணைக்கப்படல் வேண்டும். மேலும் விபரங்களை காரியாலய நேரங்களில் மாநகரசபை கணக்காளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

ஏ. ரீ. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
12-9-70. 2452


## கஷ்டம்

சுழிபுரம், செவ்வாய் வட்டுக்கோட்டைக் கிராம சபையின் கீழுள்ள ஒரு பகுதி மக்கள் மின்சாரம் கிடைத்தும் பயன் பெற முடியாமல் எண்ணை விளக்கையே நம்பியிருக்கவேண்டியுள்ளது. சித்தன் கேணி பிள்ளையார்கோவில் தெற்குப் பக்கமாகவுள்ள மின்சாரப் பாவனையாளர்கள் போதிய மின்சக்தியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றனர். தெரு விளக்குகள் சரியாக உள்ளதாகவும் வீடுகளிலேயே மின்சாரம் போதிய அளவு கிடைக்கவில்லையென்றும் ரியூப் பல்புகளைச் சிறிதும் பாவிக்க முடியாதிருப்பதாயும் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.


ராணி (யாழ்ப்பாணம்)

ஜெமினி — சௌகார் ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி


# ரசிகர்களைக் கவர்ந்த கூடைப்பந்தாட்டம்

# பற்றிசியனின் சிறப்பான ஆட்டம்

(நமது விளையாட்டு நிருபர் 'தேவா')

யாழ்ப்பாணம், புதன் யாழ். பொலிஸ் விளையாட்டு வாரவிழாவை முன்னிட்டு 'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும் கூடைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்ஒளியில் மிகச் சிறப்பாக ஆரம்பமாகியது.

மிகக் கூடுதலான ரசிகர்கள் கூட்டம் விளையாட்டுத் திடலைச் சுற்றி நின்று ஆட்டத்தை ரசித்தவண்ணம் இருந்தது. வடமாகாணத்தில் இதற்கு முன்னர் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டிகளில், இன்று கூடி நின்ற ரசிகர்களைப்போல் பெருந்திரளான ரசிகர்கள் கூட்டத்தை தாம் ஒரு போதும் கண்டதில்லை என, கூடைப்பந்தாட்டப் பொறுப்பாளர் திரு. ஏ. பாலசிங்கம் தெரிவித்தார்.

### பற்றிசியன் வெற்றி

பற்றிசியன் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும், சென்றலைஸ் 'பி' பிரிவுக் கோஷ்டிக்குமிடையில், நடைபெற்ற போட்டியில், பற்றிசியன் கோஷ்டி மிக இலகுவாக வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகியதும் முதலில் சென்றலைய்ஸ் கோஷ்டியினரே புள்ளிகளைப் பெற்றனர். இதன் பின்னர்தான் பற்றிசியன் கோஷ்டியினர் புள்ளிகளைப் பெறத் தொடங்கினர். இடைவேளைவரை பற்றிசியன் கோஷ்டியினருடன் சென்றலைஸ் கோஷ்டியினர் விட்டுக் கொடுக்காமல் விளையாடிய போதிலும் பற்றிசியன் கோஷ்டியினரே இடைவேளையின் போது 20—10 புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னணியில் நின்றனர்.

இடைவேளையின் பின் பற்றிசியன் கோஷ்டியினர் மின்னல் வேகத்தில் புள்ளிகளைப் பெற்றனர். இவர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் பந்தை மிகவேகமாக பரிமாறும் கட்டங்கள் பார்ப்பதற்கு மிக ரசிப்பாக இருந்தது. எதிர்க் கோஷ்டியின் வீரர்களை திடீர்திடீர் என ஏமாற்றி புள்ளிகளை சேகரிப்பதில், பற்றிசியன் கோஷ்டியின் வீரர் வியஜரட்ணம் சிறப்புற்று விளங்கினார்.

காப்டன் பாலசிங்கம், கே. சின்னத்துரை ஆகியோரினது விளையாட்டு சிறப்பாக இருந்தது.

இப்போட்டியின் முடிவில் பற்றிசியன் கோஷ்டியினர் 60—16 புள்ளிகள் வித்தியாசத்தால் எதிர்க் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

இப்போட்டிககு திடுவாளர்கள் எஸ். செல்வராசாவும் ஆர். நவராசாவும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்கள்.

### கோப்பாய் வெற்றி

கோப்பாய் விளையாட்டுக் கழகத்துக்கும், மாமெமோறியல் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் கோப்பாய் கழகம் வெற்றி பெற்றது.

இப் போட்டியில், இரு கோஷ்டியினரின் ஆட்டங்களிலும் வேகம் குறைவாகவே காணப்பட்ட போதிலும், கோப்பாய்க் கழகம் ஒன்றின்பின் ஒன்ருகப் புள்ளிகளைப் போட்டவண்ணமே இருந்தது. இக் கோஷ்டியின் வீரரான தேவராஜேந்திரனின் ஆட்டம் மிகச் சிறப்பாகக் காணப்பட்டது. இவரே தமது கோஷ்டிக்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார். மற்றும் இக் கோஷ்டியின் வீரர்களான நவராசா, ருத்திரகுமார் ஆகியோரும் சிறப்பாக விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்

கோப்பாய்க் கோஷ்டியினர் இடைவேளையின் போது 22—4 புள்ளிகள் வித்தியாசத்தால் முன்னணியில் நின்ருர்சள்.

இடைவேளையின் பின்னும் கோப்பாய் கோஷ்டியினரே அடுத்தடுத்து பந்தை கூடையினுள் போட்டவண்ணம் இருந்தனர். மாமெமோறியல் கோஷ்டியினருக்கு கூடையினுள் பந்தைபோடும் கட்டங்கள் பலதடவை கிடைத்த போதிலும் அதை தக்கமுறையில் பயன்படுத்தாது விட்டுவிட்டனர்.

ஆட்டமுடிவில் கோப்பாய் கழகத்தினர் 46—8 புள்ளிகள் வித்தியாசத்தால் மாமெமோறியல் கழகத்தை தோற்கடித்தனர்.

இப்போட்டிக்கு திருவாளர்கள் கியூ ஸி. யோச், எஸ் செல்வராசா ஆகியோர் மத்தியஸ்தர்களாகக்கடமையாற்றினர்கள்.

## வலைப்பந்தாட்டக் கோஷ்டிகளிடையே கடுமையான போட்டி

யாழ். பொலிஸ் விளையாட்டு வாரவிழாவை முன்னிட்டு 'ஈழநாடு' ஆதரவில் நடத்தப்படும், பெண்கள் வலைப்பந்தாட்டப்போட்டியில் இளவாலை கொன்வென்ட் வீராங்கனைகளுக்கும், கனகரத்தின மத்திய மகாவித்தியாலயவீராங்கனைகளுக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இரு கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்ற கடும்போட்டி, ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை பார்வையாளருக்கு ஆர்வத்தையும், உற்சாகத்தையும் ஊட்டியவண்ணம் இருந்தது. இரு கோஷ்டியினரும் மாறிமாறிப் புள்ளிகளைச் சேகரித்தவண்ணமே இருந்தனர். ஒருவர் மற்றவருக்குச் சளைத்தவர் இல்லை என்பதை இவர்களது போட்டியின் முடிவு எடுத்துக் காட்டுவதாக இருந்தது. இருந்தும் இடைவேளையின் போது, கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயமே 10 - 9 புள்ளிகள் வித்தியாசத்தால் முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின் ஆட்டம் ... மேலும் ... இருந்தது. இளவாலை வீராங்கனை ...

புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றனர்.

இப் போட்டியின் ஆரம்பத்தில், அரியாலை வீராங்கனைகளும் மிக உற்சாகமாக விளையாடினர். ஆனால் இடைவேளையின் போது வேம்படி மகளிர் கோஷ்டியினரே கூடுதலான புள்ளிகளைப் (9 - 2) பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும், வேம்படி கோஷ்டியினர் மிகவேகமாக விளையாடியதால், அரியாலை வீராங்கனைகள் மிகக் குறுகிய நேரத்துக்குள் சோர்வடைந்துவிட்டனர். இதன்பின் வேம்படிக் கோஷ்டியினர் வாயுவேகமாகப் புள்ளிகளைச் சேகரிக்கத் தொடங்கினர். இவர்கள் இடைவேளையின் பின் மேலும் 19 புள்ளிகளைப் பெற்றனர். ஆனால் அரியாலைக் கோஷ்டியினர் 1புள்ளியை மட்டுமேபெற்றனர். ஆட்டமுடிவில் வேம்படி மகளிர் கோஷ்டியினர் 28 - 3 புள்ளிகள் வித்தியாசத்தால் எதிர்க்கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

இப் போட்டிக்கு செல்வி எஸ். வைத்திலிங்கமும், திருமதி எல்! பாலசிங்கமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்கள்.

### இன்று உதைபந்தாட்டம்

## விக்ரறி — யாழ். கோஷ்டிகள் மோதுகின்றன

யாழ்ப்பாணம், புதன் யாழ். பொலிஸ் விளையாட்டு வாரவிழாவை முன்னிட்டு 'ஈழநாடு' ஆதரவில் இன்று மாலை யாழ். விளையாட்டரங்கில் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெறவிருக்கின்றது.

'காரைநகருக்கு

## பொலிஸ் நிலையம் வேண்டும்'

சுழிபுரம், செவ்வாய் வட்டுக்கோட்டைதொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. தியாகராசா காரை...

## இன்று

ஊரெழு மேற்கு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாளாகிய இன்று பகல் சங்காபிஷேகமும் மாலை தீமிதிப்பு உற்சவமும், இரவு ஊஞ்சல் திருவிழாவும் நடைபெறும்.

விசேஷ இசைநிகழ்ச்சிகளும் நிகழும்.

## வீடு தீக்கிரை

எழுதுமட்டுவாள், செவ் நுணுவிலிலுள்ள முறிவு வைத்தியரான கதிரித்தம்பி என்பவரின் வீடு நள்ளிரவில் தீப்பற்றி முற்ருகச் சாம்பரானது. சம்பவநேரம் வீட்டில் மூதாட்டியொருவர் படுத்திருந்ததாயும் தெய்வாதீனமாக அவர் உயிர் தப்பிக்கொண்டதாயும்தெரிவிக்கப்பட்டது. பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்

## 'இலக்கியம், மொழி, இனம் நிலம் பிரிக்க முடியாதவை'

கோட்டை, செவ்வாய் "தமிழ் இலக்கியம் தக்க முறையில் வாழ்ந்து வளர்ச்சியுற வேண்டுமென்ருல் அந்த இலக்கியத்தை உருவாக்கும் தமிழ் முதலில் வாழவேண்டும் தமிழ் வாழ்வதற்கு அந்த மொழியைப் பேணுகின்ற இனம் வாழ வேண்டும். அந்தஇனம்வாழ்வதற்கு, அதுநிலைத்தவாழ்வு பெறுவதற்கு அதனுடைய பிரதேசம் பறிபோகாது பாதுகாக்கப்பட வேண்டும். இலக்கியம், மொழி, இனம், நிலம் ஆகியவற்றைப் பிரிக்க முடியாது. ஒன்ரோடுஒன்று பிரிக்கமுடியாத அளவு பின்னிப்பிணைந்தே அவை வாழ்வு பெறுகின்றன. ஆகவே தமிழ் இலக்கியமும், தமிழ் இனமும், தமிழர் மண்ணும் ஒருங்கேசேரப் பாதுகாக்கப்பட வேண்டின் இவற்றைப் பாதுகாக்கக் கூடியதான ஒரு நிலையான அரசியல் அமைப்பை எமக்கு யாம் ஏற்படுத்திக் கொள்ள வேணடும்."

இவ்வாறு இலங்கை மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றத்தின் ஐந்தாவதுஆண்டுப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய மன்றத்தலைவர் திரு. ஈழவேந்தன் கூறிஞர்.

வங்கிக் கட்டிடத்தின் 9வதுமாடியில் நடைபெற்ற இக்கூட்ட ஆரம்பத்தில் கலைக்குரிசில் ஆனந்த குமாரசுவாமி, மகாகவி பாரதி, மறைமலை அடிகள் திரு. வி. க. கவிமணிதேசிக விநாயகம்பிள்ளை, கு. வன்னியசிங்கம் ஆகியோருக்காக

(4-ம் பக்கம் பார்க்க)


## எங்கள் புதிய இடம்

இங்கே: 40, கெய்ஸர் வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 20052

ரவி இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

தரமிக்க பிரஷ்கள் தயாரிப்பவர்கள்

G. C. E. ஆங்கில பாட மாணவருக்கு ஒரு நல்ல துணைவர்:


Varatha...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார் ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த
**இரு கோடுகள்**

யாழ்-வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன், ஜெய்சங்கர்,
ராஜஸ்ரீ, நிர்மலா
நடித்த
**பூவா தலையா**

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
**துலாபாரம்**
(தமிழ்)
★ ஏ. வி. எம். ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா,
நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

விரர்களை திமிர்திமர் என ஏமாற்றி புள்ளிகளை சேகரிப்பதில், பற்றியன் கோஷ்டியின் வீரர் விஜரட்ணம் சிறப்புற்று விளங்கினார். விளையாட்டுத் திடலின் எந்த இடத்திலிருந்தும் பந்தை கூடையினுள் போடுவதில் வீரர் சத்தியநாதன் முன்னணி வகித்தார். பற்றியன் கோஷ்டியின் மற்ற வீரர்களான காப்ரின் பொன்ராசா, ஜெயதீசன் ஆகியோரினதும் விளையாட்டு பாராட்டக் கூடியதாக இருந்தது.

பற்றியன் கோஷ்டியின் வாயுவேகமான முன்னேற்றத்தை, சென்றலெய்ஸ் கோஷ்டியினரால் தடுத்து நிறுத்த முடியாததினால் பற்றியன் கோஷ்டியினர் இடைவேளையின் பின் மேலும் 40 புள்ளிகளைப் பெற்றனர். சென்றலெய்ஸ் கோஷ்டியினர் ஆக 6 புள்ளிகளை மட்டுமே பெற்றனர். இக் கோஷ்டியின் வீரர்களான

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பிரேம்நசீர் - ஷீலா - சாரதா
நடித்த
**துலாபாரம்**
(மலையாளம்)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
நாகேஷ் — கே. ஆர். விஜயா
நடித்த
**சர்வர் சுந்தரம்**

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
சிவாஜி — ஜமுனா
நடித்த
**மருதநாட்டுவீரன்**

MANOHARA
Jaffna
Daily: 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
THE PSYCHOPATH
(Scope color)
(Strictly for Adults)

REGAL
Jaffna
Daily: 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
Max Von Sydow
Yvette Mimieux
in
THE REWARD

நின்றது.

இடைவேளையின் பின் ஆட்டம் பார்ப்பதற்கு மேலும் கவர்ச்சியாக இருந்தது. இருவாலை வீராங்கனைகள் வேகமாக விளையாடி இடைவேளைக்கு முன்னர் கோட்டைவிட்ட ஒரு புள்ளியைப் பெற்றனர். ஆட்ட முடிவில் இரு கோஷ்டியினரும் சமமான (16-16) புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப் போட்டிக்கு செல்வி எஸ். தர்மலிங்கமும் திருமதி எஸ். பாலசிங்கமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்

## வேம்படி வெற்றி

வேம்படி மகளிர் கல்லூரிக்கும், அரியாலை விளையாட்டுக்கழக வீராங்கனைகளுக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் வேம்படி மகளிர் கோஷ்டியினர் மிக இலகுவாக கூடுதலான

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

ஆனையிறவு, செவ்

ஆனையிறவு குறிஞ்சாதீவு பகுதி உப்புக்கூட்டுத்தாபன வருடாந்த விளையாட்டுப் போட்டியை இம் மாத இறுதிக்குள் நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்படி கூட்டுத்தாபனப் பொறுப்பதிகாரி திரு. எஸ். கனகநாயகம் செய்துவருகிறார். ......

## தினமும் இ. போ. சவுக்கு ரூபா 50,000 நஷ்டம்

கோட்டை, செவ்வாய்

மிக நெருக்கடியான நேரங்களில் மிதிபலகையில் அநேகமானோர் பிரயாணம் செய்வதால் இ. போ. சவுக்குத் தினம் ரூபா 50,000 நஷ்டமேற்படுகிறது மிதிபலகையில் பிரயாணம் செய்பவர்கள் பணம் கொடுக்காமல் பிரயாணம் செய்வதாலேயே இவ்வளவு பெருந்தொகையான பணம் சபைக்கு நஷ்டமாகிறது.

மேலும் பஸ் கண்டக்டர்கள் டிக்கற் யந்திரத்தை பயன்படுத்திவதில் ஏற்படும் தவறினாலும் சபைக்கு நஷ்டம் ஏற்படுகிறதாகக் கூறப்படுகிறது இத்தகைய நஷ்டங்களை போக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என இ. போ. ச. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இன்று மாலை யாழ். விளையாட்டரங்கில் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெறவிருக்கின்றது.

இந்த உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கையில் தற்போது முன்னணியில் திகழும் 'விக்டறி' விளையாட்டுக்கழகமும், யாழ் தலைவர் தெரிவுக் கோஷ்டியும் மோதிக்கொள்ளும்.

கொழும்பு விக்டேடறி குழு 1967-1969 ஆண்டுகளில் நடைபெற்ற, அகில இலங்கை உதைபந்தாட்டப் போட்டியில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. அண்மையில் நாட்டைக்காக்கும் நிதிக்கென நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியிலும் இந்தக்குழு சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

போட்டிக்கான ஒழுங்குகளை யாழ். மெட்டல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தார் செய்துவருகின்றனர்.

## கருத்தரங்கு

கோட்டை, புதன்

இலங்கை உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சங்கம் இம்மாதம் 20-ந் திகதி கொழும்பில் உல்லாசப் பிரயாணத் தொழில் பற்றிய கருத்தரங் கொன்றை நடாத்தவிருக்கிறது. இக் கருத்தரங்குக்குப் பிரதம விருந்தினராக உல்லாசப் பிரயாண தொழில் அமைச்சர் திரு பி. பி. ஜி. கலுகல்லை கலந்துகொள்கிறார்.

உல்லாசப்பிரயாணத் தொழிலை அபிவிருத்தி செய்ய அத்தொழில் பற்றி கிராம மக்களிடையே எடுத்துக்கூறுவது உல்லாசப் பிரயாணத் தொழிலை அபிவிருத்தி செய்ய அவர்கள் ஆற்றவேண்டிய சேவை பற்றி விளக்குவதுமே மேற்படி கருத்தரங்கத்தின் நோக்கங்களாகும்.

## "வர்த்தகத்தில் பட்டம்பெற ஒழுங்குசெய்க

உடுப்பிட்டி, செவ்வாய்

தமிழ்பிரிவுப் பல்கலைக் கழகம் கொழும்பில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் பொழுது ஜீ. சி. ஈ (உயர்தரம்) பரீட்சையில் வர்த்தக பாடங்களில் சித்தியடைந்தோர்களுக்கும் தமிழில் வர்த்தகத்தில் பட்டம் பெறுவதற்கு வசதி செய்துதருமாறு வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கம் கல்வி அமைச்சர் ஜனுப் பதியுதீன் மஹ்மூத்திற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரியுள்ளது.

## வேண்டும்'

சுழிபுரம், செவ்வாய்

வட்டுக்கோட்டைதொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா காரைநகர் பகுதியில் ஓர் உப பொலிஸ் நிலையம் திறக்கப்படவேண்டும் என பொலிஸ் அதிபரை வேண்டியுள்ளார்.

## இடமாற்றம்

மாவிட்டபுரம், செவ்

ஏழாலை மத்தியமகாவித்தியாலயத்தில் ஆசிரியராக பணிபுரிந்த திரு. எஸ். தாமோதரம்பிள்ளை இம்மாதம் முதல் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

G. C. E. ஆங்கில பாட மாணவருக்கு
ஒரு நல்ல துணைவர்:
Varathar
Students' Dictionary
English - English - Tamil.
விலை: ரூபா, 5-00
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
வரதர் வெளியீடு
226. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தமிழ், ஆங்கில மொழிகளில்
**அச்சு வேலை எதுவானாலும்**
எங்களையும் விசாரியுங்கள்
எமது வர்த்தக அச்சகப் பகுதியில்
★ கடிதத் தொடர்புகள்
★ அறிமுக அட்டைகள்
★ பெரிய சிறிய பிரசுரங்கள் — பிரசுரித்தல்
★ புத்தகம் கட்டுதல்
★ புதியவகைப்பற்றுச்சீட்டுப்புத்தகங்கள்
★ பெரிய பதிவுப் புத்தகம்
★ கோடடித்தல்
ஆதியன.
குறைந்த கட்டணத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஊழியர்கள் திருப்தியான வேலை செய்கிறார்கள்.
சிறந்த சேவையே எமது நோக்கம்
**ஈழநாடு** (வர்த்தக அச்சகப் பகுதி)
தொலைபேசி: 389 த. பெ. எண்: 49,
55, சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஞ்சிய பிரயாணிகளை விடுவிப்பதற்கு கொமாண்டோக்கள் மீண்டும் நிபந்தனை

## சமரச முயற்சியில் இறங்குவதில் செஞ்சிலுவைச் சங்கம் தயக்கம்

அம்மான் செப். 15

இஸ்ரேலிலும் இதர மேற்கத்திய நாடுகளிலும் காவலில் வைக்கப்பட்டுள்ள அரபுக்கொமாண்டோக்களை விடுதலை செய்யும் வரைக்கும் திசைதிருப்பிக்கொண்டு போன விமானப் பிரயாணிகளில் எஞ்சியுள்ளவர்கள் எவரையும் விடுதலை செய்யப் போவதில்லையென்று அரபுக் கொமாண்டோக்களின் விடுதலை முன்னணி அறிவித்திருக்கிறது.

காவலிலிருந்து விடுவிக்கப் பட்டவர்களில் எஞ்சியவர்களை கோஷ்டி கோஷ்டியாகப் பிரித்து மறைவிடங்களில் ஒளித்து வைத்திருப்பதாகவும் இவர்களை விடுவிக்க பலவந்த முயற்சி எடுக்கப்பட்டால் அது அவர்களின் உயிருக்கு ஆபத்தாக முடியும் என்றும் கொமாண்டோக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இஸ்ரேலிலும் இதர நாடுகளிலும் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலையாகும் வரைக்கும் இது சம்பந்தமாக எவருடனும் பேச்சுகள் நடத்தப் போவதில்லை யென்றும் கொமாண்டோக்கள் அறிவித்துள்ளனர்.

இதேசமயம், கொமாண்டோக்கள் சிறைப்பிடித்து வைத்திருக்கும் விமானப் பிரயாணிகள் அனைவரும் ஒரேவிதமாக நடத்தபடாத வரைக்கும் கொமாண்டோக்களுடன் பேச்சுக்கள் நடத்த விரும்பவில்லையென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் பிரயாணிகளை விடுவிப்பதற்காக தமதுமுயற்சிகளைத் தொடர்ந்து நடத்தப் போவதாக முன்னர் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்திருந்தது. இந்தப் பிரயாணிகளை விடுதலை செய்வதற்கு எதிர் நடவடிக்கை எதிலும் இறங்கவேண்டாம் என்று சம்பந்தப்பட்ட நாடுகளை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் கேட்டிடிருக்கிறது.

ஸ்தம்பிக்கச் செய்து விட்டதாக இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் திரு. அபாஈபான் கருத்துத் தெரிவித்திருக்கிறார்

### எகிப்தின் யோசனை

அமைதி முயற்சிகள் ஸ்தம்பித்திருப்பதை நீக்குவதற்கு வல்லரசு நாடுகள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று எகிப்து கருத்து வெளியிட்டிருக்கின்றது.

......

## "க்ஷயரோகத்துக்கு காரணம் என்ன?"

யாழ்ப்பாணம், புதன்

"இளமையில் போஷாக்குக் குறைந்த உணவுகளை குழந்தைகளுக்குக் கொடுப்பதால் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகுமுன்பே க்ஷயரோகம் அவர்களைப் பிடித்துவிடுகிறது. இன்று புகைபிடிப்பவர்களிடையேயும், போஷாக்குக் குறைந்த உணவருந்துபவர்களிடையேயுமே அதிகமாக இந் நோய் காணப்படுகின்றது இதை சமூகத்திலிருந்து விரட்டியடிக்க இளைஞர்கள் முன்வரவேண்டும்."

நாவற்காடு இளைஞர்மன்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மன்றத் தலைவர் திரு. அருமைநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். வேறு பலரும் உரை நிகழ்த்தினர். காசநோயாளர் பற்றிய ஓரங்க நாடகமும் இடம்பெற்றது.

(கு. வி. ம.)

— —

## 63 சேகுவேரா வாலிபர்களும் பிணையில் விடுதலை

கோட்டை, செவ்.

கடந்த மாதஇறுதியில்சிது வைபிரிவிலுள்ள வீடொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டிருந்த சேகுவேரே இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகிக்கப்

## வெள்ளத்துக்கு 247 பேர் பலி

புதுடில்லி, செப் 15

குஜராத் மாகாணத்தில் அண்மையில்ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது காணுமல் போய்விட்டதாகக் கருதப்பட்ட சுமார் 247 பேரில் பலரும் மரணமாகியிருக்க வேண்டும் என்று அஞ்சப் படுகின்றது. இப்பகுதியில் இரண்டு கிராமங்கள் முற்ருக அடித்துச்செல்லப்பட்டன.

--

## 9 மாதமாக படுக்காத யானை

திருவனந்தபுரம் செப். 15

கேரளத்தில் கோயில் யானை ஒன்று 9 மாதகாலமாக நின்றுகொண்டே இருந்தபின்னர் நேற்று மாரடைப்பினுல் இறந்து போயிற்று. கேசவன் என்ற யானைக்கு கால்களில் ஏற்பட்ட புண்கள் குணமாகாததால் கடந்த 9 மாதமாக படுத்து ஓய்வு எடுக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது.

......

சாவகச்சேரித்தொகுதி

## அபிவிருத்தி பற்றி ஆராயக்கூட்டம்

எழுதுமட்டுவாள், செவ்

சாவகச்சேரித் தொகுதியின் கல்விநிலை, சுகாதாரம், வீதிகள், மின்சாரம், தண்ணீர் விநியோகம் விவசாய அபிவிருத்தியுட்பட இன்னும் தொகுதியின் தேவைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் இம்மாதம் 29ம் திகதி காரியாதிகாரி நகர சபைத் தலைவர், கிராம

## 'தெய்வீகக்கலை உலகெலாம் பரவ உழைக்க வேண்டும்'

### கல்வி கலை கலாச்சார காப்புக் கழகம் அமைப்புக் கூட்டத்தில் உரை

தாவடி, செவ்வாய்

'கல்வியால் கலைவளர்கின்றது கலையினுல் கலாச்சாரம் வளர்கின்றது. கலாச்சாரத்தைப் பேணிப்பாதுகாப்பது நம் ஒவ்வொருவருடையதும் முக்கிய கடமையாகும். தமிழ் மக்களின் கலை கலாச்சாரத்தை மேல்நாட்டவரும் போற்றி வருகின்றனர்கள். தமிழரின் கலை கலாச்சாரம் புனிதத் தன்மையுடையது.

கல்வியால், கலையால், ஞானமுண்டாகிறது. ஞானம் சம்பந்தமான கழகம், ஞானசம்பந்தர் ஆதீனத்திலேயே அங்குரார்ப்பணம் செய்யப்படுவது சிறப்புடையது.

இவ்வாறு, நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற கல்வி, கலை, கலாச்சார காப்புக் கழக அமைப்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய ஸ்ரீலஸ்ரீ. சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் கூறினர்.

'ஓவியம், சிற்பம், சங்கீதம் போன்ற கலைகளில் ஈடுபடுபவனுக்கு ஐம்பொறிகளையும் சிறிது நேரமாவது ஒரு நிலையில் வைத்திருக்கும் ஆற்றல் வேண்டும். அத்தன்மை பொருந்தியவனே ஞானஸ்தன். கலையிலே ஈடுபடுபவர்கள் ஞானிகளே. ஒரு விஷயத்தைச் சாதிக்கும் போது, சோதனையும் அதனுல் வேதனையும் அடைய நேரிடும். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது சகலரும் ஒன்றுபட்டு இயங்குதல் நன்று' என சுவாமிகள் தெரிவித்தார்.

ஆசிரியமணி திரு ந. தம்பிரத்தினம் பேசியதாவது.

'தமிழரின் கலை, கலாச்சாரம் நெறி தவருமல் இருக்க என்ன செய்யலாம், கலாச்சாரத்தை எப்படிக் காக்கலாம் என்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். ஒற்றுமைப் பட்டால் கலை, கலாச்சாரத்தைப் பேண வழிகாணலாம், கலையைப் பேணுவதும் ஒருகலை. இதில், சாதி, சமய பாகுபாடு சிறிதும் இருக்கக் கூடாது. மாறுபட்ட கருத்துக்களுடன் ஏதாவது செய்ய முற்பட்டால், கலையுலகில் நயம் காண முடியாது. தமிழரின் கலை, கலாச்சாரம், பண்பாடு என்பன அழியாது பாதுகாக்க இக் கழகம் அமைக்கப் படுவது சிறப்புடையது.

வணக்கத்துக்குரிய சுவாமி சவரிமுத்து பேசியபோது குறிப்பிட்டதாவது: 'தமிழர் [illegible] கெனத் தனிப்பெரும் [illegible] பு, குணம் [illegible] ன் பன அமைந்துள்ளன. [illegible] லயிலே.

## 'எமது பத்திரிகைகள் தரம் உடையனவா?'

கொழும்புத்துறை, செவ்

'வெளிநாட்டுப்பத்திரிகைகள் தரமற்றவையாயின், இலங்கைப் பத்திரிகைகள் எல்லாம் தரமுடையனவா? தரமற்ற வெளிநாட்டுப் பத்திரிகைகளைத் தடைசெய்யும்பொழுது உள்ளூர் தரமற்ற பத்திரிகைகளும் தடைசெய்யப்படவேண்டும். அவ்விதம் தடைசெய்யப்படுமா? என்ற கேள்வியை இன்று எழுப்பவேண்டியுள்ளது. உள்ளூர்ப் பத்திரிகைகளின் தரம் உயரவும் சிறுபத்திரிகைகள் வளரவும் வேண்டுமாயின் முதலில் உள்ளூரில் உள்ள தரமற்ற சஞ்சிகைகளை தடை செய்யவேண்டும்' இவ்வாறு இலங்கை இந்துசமய பிரசார சபை கமிட்டிக்கூட்டத்தில் உரையாற்றுகையில் திரு. ஜே. நாகேஸ்வரன் கூறினர்.

சமயவளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி நூல்களைத் தடை செய்வது நல்லதல்ல என்றும் அபிப்பிராயம் தெரிவித்தார்.

......

## இலக்கிய விழா

[illegible]

பொன்னலை அறிவு வளர்

# "தன்னாட்சிதான் கேட்கிறோம் தனியாட்சியல்ல"

## மாநில சுயாட்சி மாநாட்டில் கருணாநிதி உரையின் விபரம்



சென்னை, செப். 15

அண்மையில் சென்னையில் நடந்து முடிந்த மாநிலசுயாட்சி மாநாட்டில் தமிழ்நாடு முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான திரு. மு. கருணாநிதி பேசியதின் ஒருபகுதி இங்கு தரப்படுகின்றது. மாநில சுயாட்சிக் கோரிக்கைபற்றி அவர் தந்துள்ள விளக்கம் சிந்தனைக்குரியது.

மாநில சுயாட்சி தத்துவம் பற்றி நாவலர் தெளிவாக எடுத்துக் கூறினர். வங்கத்தின் முன்னுள் முதல்வர் அஜாய்முகர்ஜி பேசுகையில் மாநிலங்கள் மேலும் பல உரிமைகளை பெற்றுகவேண்டும் என்று கூறினர்.

நாஞ்சில் மனேகரன் பேசுகையில் மாநில சுயாட்சிக்கான வழிவகைக்கு தமிழ்நாடு வழிகாட்டியாக இருக்கிறது என்று கூறினர்'

தமிழ்நாட்டில்தான் மாநில சுயசட்சி குரல் ஒலிக்கிறது: தி. மு. கழகம்தான் அந்த குரலை எழுப்புகிறது என்ற நிலைக்கு இடம்இல்லாமல், அந்த கருத்து அகில இந்தியா முழுவதும் பரந்திருக்கிறது என்பதைமெய்ப்பிக்கும் வகையில் பல கட்சி தலைவர்கள் இங்கு அமர்ந்துள்ளார்கள்.

4 அல்லது 5 மாநிலங்களின் தலைவர்கள் இங்கு அமர்ந்திருக்கிருர்கள். சில மாதங்களில் அல்லது சில ஆண்டுகளுக்கு பிறகு நடைபெற இருப்பதாக நாஞ்சில் மனேகரன் கூறிய வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள எல்லா மாநில பிரதிநிதிகளும் வந்து இதே குரலை எதிரொலிக்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

### அண்ணவின் கட்டளை

நம்மை எல்லாம் ஆளாக்கிவிட்டவர் பேரறிஞர்பெருந்தகை, மறைந்த மாமேதை அண்ண கடைசியாக எழுதிய கட்டுரையில், "நான் முதல் அமைச்சராகத்தான் இருக்கிறேன். ஆனல் அதிகாரம் அற்ற நிலையில் இருக்கிறேன். தமிழகம் மட்டும் அல்ல எல்லா மாநிலங்களும் அதிக அதிகாரங்களை பெற்றுகவேண்டும்" என்று எழுதி உள்ளார்.

ட்டு விட்டது மாநில சுயாட்சியின் வெற்றி இன்று முதல் தொடங்கி விட்டது.

மாநில சுயாட்சி தத்துவம் என்ன? மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் நாங்கள் கேட்பது தன்னாட்சிதானே தவிர தனியாட்சி அல்ல என்பதை திருச்சி மாநாட்டில் இருந்தே அறிவித்து வந்துஇருக்கிறோம்.

இந்திய அரசியல் சட்டம் எப்படி உருவாக்கப்பட்டது? பிரிந்து போகும் உரிமையுள்ள ஒரு கூட்டாட்சிஎன்ற கருத்தின் அடிப்படையில் அரசியல் சட்டத்தை உருவாக்கலாம் என்று பேசப்பட்டது இதே கருத்தை மறைந்த பிரதமர் நேரு லாகூரிலும் காஷ்மீரிலும் நடந்த கூட்டங்களில் பேசி இருக்கிறார்.

பிரிந்து போகும் உரிமைகளோடு கூடிய ஒரு கூட்டாட்சி என்பதுசுதந்திரத்துக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து போகும் உரிமை இல்லாத கூட்டாட்சி என்ற அளவுக்கு மாற்றம் கொண்டது.

ஆனல் அரசியல் சட்டத்தை உருவாக்க எண்ணிய போது மத்திய அரசு பலமுள்ளதாக இருக்கும் விதத்தில்ஒருகூட்டாட்சிக் கொள்கையை ஏற்படுத்த விரும்பினார்கள். அதாவது கூட்டாட்சிபோல் தோற்றம் உள்ள — ஆனல் மத்திய அரசுக்குப் பெரும் அளவு அதிகாரங்கள் உள்ள அரசியல் சட்டமாக ஆக்கப்பட விரும்பினார்கள்.

ஆனல் இறுதியில்1950-ம் ஆண்டில் அரசியல் சட்டம் உருவாக்கப் பட்டபோது: மத்திய அரசுக்கு ஏகபோக அதிகாரங்கள் வழங்க உதவும் வகையில் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. அதுதான் இன்றைய அரசியல் சட்டம்.

### சந்தேகக் கண்

தி. மு. கழகம் நடத்தும் இந்த மாநாட்டின் மூலம் மத்திய அரசுக்கும் மற்ற மாநில அரசுக்கும் நம்மை சந்தேகக் கண்ணேடு நோக்குபவர்களுக்கும் திட்டவட்டமாக எடுத்துக் கூறவிரும்புவது இதைத்தான்-நாங்

நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்யப்படுகிற கரும்பைபயன்படுத்தி சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தக் கூட மத்திய அரசின் அனுமதி தேவைப்படுகிறது, சமீபத்தில் சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் விரைவில் 3 சர்க்கரை ஆலைகள் தொடங்க மத்திய அரசு அனுமதிவழங்கி இருக்கிறது. என்று அறிவித்தேன்.

இந்த அனுமதியை பெற ஓராண்டு காலத்துக்கு மேலாக அமைச்சர்கள் டெல்லிக்குபடை எடுக்க வேண்டி இருந்தது, தொழில்கள் வளரவேண்டுமானல் மாநில அரசுக்கு அதிக அதிகாரங்களை பெற்றுல் ஒழிய முடியாது என்ற நிலைக்கு அரசு வந்து இருக்கிறது.

புராதன சின்னங்களை பாதுகாக்க தேவைப்படும் அதிகாரம்கூட நம்மிடம் இல்லை. தஞ்சாவூர் கோவிலில் ராஜராஜன் சிலையை அமைக்க வேண்டும் என்று கூறினேம். அவர் பெரிய வீரர். தமிழர்களின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் என்பதால் அங்கு அமைக்கவேண்டும் என்று கூறவில்லை. தஞ்சை கோவிலை கட்டியவர் என்பதால் அங்கு வைக்கவேண்டும் என்று கூறுகிறோம்.

அவருக்கு சிலை வைப்பதற்கு அனுமதி தரும்போது கூட நாம் குறிப்பிட்ட இடத்தில் சிலை வைக்க அனுமதி தரப்படவில்லை.

### ராமேஸ்வரம் கோவில்

ராமேசுவரம் கோவில் தமிழ்நாட்டு அரசின் கையில் இருக்கிறது. எனவே இந்த கோவிலை கட்டிய சேதுபதியின் சிலை அந்தக் கோவிலின் உள்ளே இருக்கிறது.

ஆனல் தஞ்சாவூர் பிரசுகீசுவரர் கோயிலை கட்டிய ராஜராஜசோழன் சிலையை, அந்த கோயிலில் நாம்வைக்க முடியவில்லை. காரணம் அந்த கோயில் மத்தியஅரசு அதிகாரத்தின் கீழ் இருக்கிறது. கோவிலில் ராஜராஜ சோழன்சிலையை வைக்க அவர்கள் அனுமதி அளிக்கவில்லை. பதிலாக அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கை எதிலும் இறங்கவேண்டாம் என்று சம்பந்தப்பட்ட நாடுகளை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் கேட்டிடிருக்கிறது.

### யுதாண்ட் கண்டனம்

விமானங்கள் திசைதிருப்பப்படுவது குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் வன்மையாகக் கண்டித்திருக்கிறார். விமானங்களைக் கடத்திச் செல்கிறவர்கள் சர்வதேச நீதிமன்றங்களின் முன் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் என்று யுதான்ட் யோசனை தெரிவித்திருக்கிறார்.

ஐ.நா. விசேஷப் பிரதிநிதி டாக்டர் ஜாரிங் மேற்கொண்டுள்ள அமைதி முயற்சிகளின் மூலம் மட்டுமே மேற்காஸியாவில் அமைதி ஏற்படுவது சாத்தியமாகும் என்று அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

### ஈபான் கருத்து

மேற்காஸிய அமைதி முயற்சிகளை அரபுக் கொமாண்டோக்களின் விமானத் திசை திருப்பல்

## பகிஷ்கரிப்பு 16-வது தினம் தொடர்கிறது

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவெட்டி ஸ்ரீ நாரத தமிழ் பௌத்த பாடசாலையில் 16-வது தினமாகப் பகிஷ்கரிப்புத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. சுமார் 300 மாணவர்களும், பெற்றோர்களும் இப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பாடசாலையில் கடந்த 5வருட காலமாகச் சம்பளமின்றிப் பணிபுரிந்து வந்த ஆசிரியர்களில் 4 ஆசிரியர் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே இப்பகிஷ்கரிப்பு நடைபெற்று வருகின்றது.

## தென் கரம்பொன் இளைஞர் மன்றம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஊர்காவற்றுறை தென் கரம்பொன் இளைஞர் மன்றம் என்ற பெயரில் கரம்பொன் தெற்கு இளைஞர்கள் ஒரு கழகத்தை ஆரம்பித்துள்ளனர். மன்ற உபபிரிவுகளாக நாடகமன்றம், விளையாட்டுக்குழு என்பன அமைக்கப்பட்டன. நிருவாகிகள் வருமாறு:

போஷகர்: சி. பரமநாதன் தலைவர்: சு. ஜெகநாதன், உபதலைவர்: சு. யோகேந்திரன் காரியதரிசி: வீ. இரவிலோசனன், உபகாரியதரிசி: கு. சந்திரமோகன், தனாதிகாரி, க. ஸ்ரீநாதன் உபதனாதிகாரி: செ. தி. சம்பந்தன்.

வைப்பிலிலுள்ள விடொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகிக்கப்படும் 63 பேரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு நீதிமன்றத்தில் இவர்களை இம்மாதம் 24-ம் திகதி ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## "மதநம்பிக்கை வேண்டும்"

யாழ்ப்பாணம்: புதன்

எமது எதிர்கால சந்ததியினர் தன்மானத்துடனும் மனச்சாந்தியுடனும் வாழ்வதற்கு மத நம்பிக்கை அவசியம் வேண்டும். இன்று இளைஞர்கள் மத்தியிலே காணப்படும் அமைதி இன்மைக்கு இளைஞர்கள் மத்தியில் சரளமாக அடிபடுகிற லெனினிஸ மார்க்ஸிஸ சித்தாந்தங்கள்தான் ஒரு காரணம் எனச் சொல்லாம். எமது பழைய மதக்கோட்பாடுகள் இளைஞர்கள் மத்தியிலே மீண்டும் புத்துயிர் பெறவலியுறுத்தப்படல் வேண்டும். இதற்கு இதுபோன்ற கூட்டுப்பிரார்த்தனைச் சபைகள் வழிவகுக்கக்கூடியன என்று கந்தரோடை வத்தாக்கை அம்மன் ஆலயத்தில் பிரதி வெள்ளி வாரந்தோறும் நடைபெற்றுவரும் கூட்டுப் பிரார்த்தனை விழாவில் பேசிய சைவப்பிரசாரகர் பிரமஸ்ரீ வ குகசர்மா சொன்னார்

கந்தன் கருணை என்னும் பொருள் பற்றி அவர் பேசினார்.

......

## பாடசாலைகளில் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கிளிநொச்சித் தொகுதியிலிருந்து ஆசிரியர்கள் பலர் தங்கள் சொந்த இடங்களுக்கு மாற்றலாகிச் செல்வதாலும் இங்குள்ள பாடசாலைகள் பலவற்றின் தலைமையாசிரியர்களும் உதவி ஆசிரியர்களும் பற்றாக்குறையாக உள்ளபடியாலும், பாடசாலைகளை நல்ல முறையில் நடத்தமுடியவில்லை, எனவே க்குறையை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு கிளிநொச்சிப் பாராளுமன்றஉறுப்பினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் சங்கத் தலைவர் திரு. இ. த. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கிளிநொச்சித் தொகுதித் தமிழ் ஆசிரியர் சங்கசெயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

(குவிம)

வடிக்கை எடுப்பதற்காக சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் இம்மாதம் 29ம் திகதி காரியாதிகாரி நகர சபைத் தலைவர், கிராம சபைத்தலைவர்கள், கிராம முன்னேற்றச் சங்க தலைவர்கள் கொண்ட கூட்டமொன்றைக்கூட்டவுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், செவ்.

பண்டத்தரிப்பு இளம் விவசாயிகள் கழக புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: கி. இராசரத்னம் காரியதரிசி: செ. சண்முகநாதன், தனாதிகாரி: பி.-பசுதிநாதர் நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0

திருகோணமலை. செவ்

கந்தளாய் திருவள்ளுவர் மன்றத்தின் புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் போஷகர்: திரு. சின்னத்தம்பி ஆசிரியர்) தலைவர்: திரு ப. யோசப்நோமன், உபதலைவர்: திரு. அ. தியாகராசா, செயலாளர்: திரு க. யோகராசா, உபசெயலாளர்: திரு. ச. செல்வம், பொருளாளர் திரு. க சிதம்பரநாதன்.

ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0

புதுக்குடியிருப்பு, செவ்

புதுக்குடியிருப்பு கிராம முன்னேற்ற சங்க புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவர்: க. சிதம்பரப்பிள்ளை செயலாளர்: ச. சண்முகம், பொருளாளர்; பொ. வீரசிங்கம். மற்றும் ஏழு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0

தாவடி, புதன்

இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்க புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: வழக்கறிஞர் திரு க. சோமாஸ்கந்தன், உபதலைவர்கள்: திரு. சு. பொன்னையா. திரு. வ. ஆறுமுகம், செயலாளர்: திரு. சி பொ வ. மா. க. முதலியார், உபசெயலாளர்: திரு. செ. தம்பிராசா, தனாதிகாரி: திரு க. விசுவலிங்கம்.

13பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

றும் அபிப்பிராயம் தெரிவித்தார்.

......

## இலக்கிய விழா

சுழிபுரம், செவ்வாய்

பொன்னாலை அறிவு வளர்ச்சிக் கழகத்தினரால் பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாசாலை மண்டபத்தில் இலக்கியவிழா கொண்டாடப்பட்டது. விழாவுக்கு பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் தலைமை வகித்தார் 'உள்ளக் குமுறல்கள் ஓயாவோ' என்ற தலைப்பில் கவியரங்கு நடைபெற்றது. பண்டிதர் ப இராசகுரு, செல்வி வா, யோகலட்சுமி, செல்வன் சி சௌந்தரராஜன், செல்வி வா, யோகசக்தி ஆகியோர் கவியரங்கில் கலந்துகொண்டனர். விசேட சொற்பொழிவாளர்களாக புலவர் ம. பார்வதிநாதசிவம், புலவர் கா. வேல்முருகன், வித்துவான் நா. சிவபாதசுந்தரனார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

......

### பண்ணாகத்தில்

## அநகாரிக தர்மபாலா தினம்

சுழிபுரம், செவ்வாய்

பண்ணாகம்மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் அநகாரிக தர்மபாலா தினம் கொண்டாடப்பட்டது. வித்தியாலய அதிபர் திரு. செ. ஸ்ரீநிவாசன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

......

## தொழிலாளர் கமிட்டிக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் - மன்னார் ஆகிய இடங்களிலுள்ள பஸ் தொழிலாளர் கமிட்டிகள் தேர்தலுக்குரிய விண்ணப்பங்கள் வெள்ளிக்கிழமை ஏற்றுக் கொள்ளப்பட்டன. பருத்தித்துறையில் நேற்று முன்தினம் தேர்தலுக்குரிய விண்ணப்பங்களை சமர்ப்பித்தனர்.

மன்னாரில் எழுதுவினைஞர் தொகுதியில் இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த திரு. சச்சிதானந்தம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

......

## சீர்கேடு

உடுப்பிட்டி, செவ்வாய்

உடுப்பிட்டிக் கிராமசபையின் 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த தலையாட்டி முள்ளி ஒழுங்கை பாவனைக்கு உதவாத நிலையில் மிகவும் சீர்கேடாக இருப்பதாக கி. சபைக்கு புகார் தெரிவிக்கப்படுகிறது.

வணக்கத்துக்குரிய சுவாமி சவரிமுத்து பேசியபோது குறிப்பிட்டதாவது: "தமிழர்களுக்கெனத் தனிப்பெரும் பண்பு, குணம் ... பன அமைந்துள்ளன. கலையிலே, கடவுள் தன்மை பொருந்தியுள்ளது. கலாச்சாரத்தில் பக்திவளர்கிறது. கலையின் புனிதத் தன்மையை வளரச் செய்து, அகில உலகத்திலும் தெய்வீகமான கலை கலாச்சாரத்தைப் பறைசாற்ற இக்கழகம் பாடுபடவேண்டும்' இசைப்புலவர் திரு. என். சண்முகரத்தினம் உட்படப் பலர் பேசினர்.

கழக உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: வணபிதா தனிநாயகம் அடிகள், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், யாழ்ப்பாணத் தொகுதி எம். பி திரு. ஸி. எக்ஸ். மார்ட்டின், தபால் அமைச்சர் செ குமாரசூரியர், நல்லூர் எம். பி. ஸி. அருளம்பலம். தலைவர்: திரு சி நாகராசா (முன்னாள் யாழ் மேயர்), உபதலைவர்: திரு கந்தையா, திரு கே வி எஸ் சண்முகநாதன், திரு என் சண்முகரத்தினம், செயலாளர்: ஓவியர் திரு பெனடிக்ற், உபசெயலாளர்: திரு ஆனந்தவிநாயகர், திரு பூபாலசிங்கம், தனாதிகாரி: திரு நா த செல்லத்துரை, உபதனாதிகாரி: திரு கிருஷ்ணமூர்த்திஐயர்.

15 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரியப்பட்டது.

காரம் அற்ற நிலையில் இருக்கிறேன். தமிழகம் மட்டும் அல்ல எல்லா மாநிலங்களும் அதிக அதிகாரங்களை பெற்றாகவேண்டும்'' என்று எழுதி உள்ளார்.

மத்திய அரசுக்கும் மற்ற மாநில அரசுக்கும் நம்மை சந்தேகக் கண்ணோடு நோக்குபவர்களுக்கும் திட்டவட்டமாக எடுத்துக் கூறவிரும்புவது இதைத்தான்-நாங்

அந்த கோயில் மத்திய அரசு அதிகாரத்தின் கீழ் இருக்கிறது. கோவிலில் ராஜராஜ சோழன்சிலையை வைக்க அவர்கள் அனுமதி அளிக்கவில்லை. பதிலாக அந்த

# கோவிலைப் பாதுகாக்கும் அதிகாரம் கூட நமக்கு இல்லையே!

அதைகட்டுரை என்றுதான் முதலில் நினைத்தோம். இப்போது கட்டளையாக ஏற்றுக் கொண்டுள்ளோம். சிலம்புச் செல்வர் ம. பொ. சி, ஒரு கூட்டத்தில் பேசுகையில், 'கழக நண்பர்களே, அது கட்டுரை மட்டும் அல்ல, கட்டளை மட்டும் அல்ல உயில்.' என்று கூறினார்.

ஒருவர் எழுதிய உயிலை அந்த வீட்டு பெரியவர்கள் இளையவர்களிடம் ஒப்படைப்பார்கள். அண்ணா எழுதி வைத்த உயிலை நம் வீட்டு பெரியவர்களில் ஒருவராகி விட்ட ம பொ. சி, நம்மிடம் ஒப்படைத்தார்.

அதன் ஒரு சரத்துதான் இந்த மாநில சுயாட்சி மாநாடு இந்த மாநாடு பற்றிய இரு தரப்பினர் விவாதம் பற்றி நெடுஞ்செழியனும், மனோகரனும் எடுத்துக் கூறினார்கள்.

மாநில சுயாட்சி மாநாட்டுக்குஎதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக சோஸலிஸ்டு கட்சியினர் அறிவித்தார்கள். ஆனால் பீகாரைச் சேர்ந்த சோஸலிஸ்ட் தலைவர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அண்டைமாநிலத்திலுள்ளவர்களுக்கு இப்போது எரிச்சல்குறைந்துவிட்டது ஆனால் இங்கு உள்ளவர்களுக்குஅதிகமாகஇருக்கிறது.

நிலவில் காலை வைத்த அமெரிக்க வானவெளி வீரர் ஆம்ஸ்டிராங்கை இந்தியாவில் காஷ்மீர்முதல் கன்னியாகுமரிவரை உள்ள மக்கள் பாராட்ட தவறவில்லை காரணம் ஆயிரக்கணக்கான மைல்களுக்குஅப்பால் உள்ள அமெரிக்கா நாட்டில் பிறந்தவர் ஆம்ஸ்டிராங்.

அதே ஆர்ம்ஸ்டிராங் நமக்கு அடுத்த வீட்டில் பிறந்திருந்தால் இது என்ன பிரதமாதம், என்னை அனுப்பினால்கூட நானும் நிலவில் கால் வைத்திருப்பேன்என்று கூறுவார்கள் அதேபோல் தான் இந்த மாநாடு பற்றியும் இப்போது கூறுகிறார்கள்.

### தன்னாட்சிதான்

நம்முடைய கருத்துகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அவர்களுடைய இதயத்தை தொ

ள்கேட்கும்சுயாட்சிபிரிந்து போகும் உரிமை உள்ள கூட்டாட்சி அல்ல, நாங்கள் கேட்பது இப்போது உள்ள மத்தியில் அதிகாரம் குவிந்து கிடக்கும் நிலை நீடிக்கக் கூடாது.

சுதந்திரத்துக்குசில ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்டதே பிரிந்து போகும் உரிமை இல்லாத கூட்டாட்சி என்று அதைத்தான் கேட்கிறோம்.

என்னென்ன அதிகாரங்களை பிரித்து தாருங்கள் என்று கேட்பது என்பது பற்றி ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை கூற அரசு அமைத்ததே அந்த குழுவிடம் அரசு கூறி இருக்கும் கருத்து இதுதான். நாட்டின் ஒற்றுமை பாதிக்கப்படாத விதத்தில் இது பற்றி ஆராய்ந்து அறிவிக்க வேண்டும் என்றுதான் கூறி இருக்கிறோம். சுதந்திரத்துக்கு முன்பு கூறப்பட்ட பிரிந்து போகும் உரிமை இல்லாத கூட்டாட்சி அமைத்திடத் தான் மாநில சுயாட்சி வழங்கிடுங்கள் என்று கேட்கிறோம்,

மாநிலங்களின் சட்டம் இயற்றும் அதிகாரங்களைக் கூட கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்தியிலே இருக்கிறது. அவசர நிலை என்று கூறி எந்த அதிகாரத்தையும் எடுத்துக்கொள்ளும் அதிகாரம் மத்தியில் இருக்கிறது இவைகள் மாற்றப்பட வேண்டும். அரசியல் சட்டத்தில் உள்ள இந்த பகுதி அகற்றப்படவேண்டும்.

நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்ளவே மாநில சுயாட்சி கேட்கிறோம். மாநிலத்தில் தொழில்கள் வளர சுயாட்சி கேட்கிறோம், வெளிநாட்டு உதவி தேவைப்படும் தொழில்களை தொடங்க வேண்டுமானால் மத்திய அரசு அனுமதியை கேட்க வேண்டும் என்று கூறினால் பொருள் உண்டு. நமது நாட்டில் உள்ள மற்ற மாநிலங்களின் உதவி பெற்று தொழில்களை தொடங்குவதற்கு கூட மத்திய அரசின் உத்தரவு பெறவேண்டிய நிலை இருக்கிறது.

சிலையை கோயில் காவல்காரன் போல், வெளியில் வைக்க வேண்டும் என்று கூறிவிட்டார்கள். ஆகவே அவர்கள் சொல்லிய இடத்தில் அல்லது வேறு முக்கிய இடத்தில்தான் சிலையை நாம் வைக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்,

ஒருவேளை அந்த சிலையை கோயிலுக்குள் வைத்தால், நாளைக்கே அதை அகற்ற அவர்களிடம் அதிகாரம் உள்ளது.

### வானொலி நிலையம்

ஆகாசவாணியை, வானொலி நிலையம் என்று மாற்ற அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் எத்தனைமுறை கடிதம் எழுத வேண்டி இருந்தது. அதற்காக எத்தனைபேர் சிறை செல்ல வேண்டியிருந்தது, ஆகவேதான் நாம் அதிக அதிகாரம் நமக்குவேண்டும் என்று சொல்கிறோம். 'மதராஸ் வானொலிநிலையம்' என்பதை 'சென்னை வானொலி நிலையம்' என்று மாற்றுவது பற்றி, நான் டெல்லி மந்திரி சத்திய நாராயண சின்காவிற்கு கடிதம் எழுதினேன்.

அந்த கடிதத்திற்கு அவர் பதில் எழுதி இருக்கிறார். அதில் முதலில் சென்னை என்று நீங்களே மாற்றுங்கள் அதன்பின்பு தான் பெயரை மாற்றமுடியும். இப்போதைக்கு இயலாது என்று எழுதி இருக்கிறார்.

நான் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன். வானொலியில் சென்னை என்று பெயரை மாற்றுவிட்டால், தமிழக அமைச்சர்கள் வானொலி நிலையத்தில் பேசமாட்டார்கள். இதைத்தான் நாம் செய்யமுடியும், வேறு எதைச் செய்யமுடி என்று நினைக்கிறீர்கள்?

விலைவாசி உயர்ந்து விட்டது என்று கூறுகிறார்கள். ஒத்துக்கொள்கிறேன். ஆனால் தி.மு. கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு அரிசி விலையை குறைத்திருக்கிறது. வேளாண்மையில் மேற்கொண்ட புதிய திட்டத்தாலும் பசுமை புரட்சியினாலும் உணவு உற்பத்தி பெருகி உணவு கட்டுப்

(5-ம் கலம் பார்க்க)

(8-ம் கலத் தொடர்ச்சி)

பாட்டை நீக்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளோம்.

இப்போது அரிசி தாராளமாக கிடைக்கிறது. ஆனால் வேறு பண்டங்களின் விலை உயர்ந்துள்ளது. இதற்கு மாநில அரசு காரணமா? இல்லை, விலைஉயர்வை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது.

அந்தஅதிகாரத்தை கேட்க வேண்டும் என்கிறோம் நாம், கேட்கக்கூடாதுஎன்கிறார்கள் காங்கிரசார். ஏன் என்றால் விலைவாசி உயர்ந்தால் மக்களிடம் அதிருப்தி ஏற்படும். அதை 1972 தேர்தலுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதுகிறார்கள்,

### வெல்லம்

சென்ற ஆண்டு வெல்ல விலை வேகமாக ஏறியது. வெளி மாநிலங்களுக்குவெல்லத்தை அனுப்பக்கூடாது என்று தடைபோட்டோம், உடனே விலை சரிந்தது அந்த உத்தரவு சட்டத்திற்கு புறம்பானது என்று கூறுகிறார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஒரு செயலைச் செய்யும்பொழுது அதனாலேற்படும் விளைவுகளை நன்கு ஆராய்ந்த பின்பே அதனைச் செய்யத் தொடங்கவேண்டும். அல்லாமல் செய்த பின் விளைவுகளை ஆலோசிப்போம் என்றெண்ணுதல் இழுக்கையே விளைவிக்கும். — வள்ளுவர்.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 31-ந் திகதி (16 9-70)


## கனிஷ்ட பல்கலைக்கழகங்கள்

1969-ம் ஆண்டில் நிறுவப்பட்ட ஆறு கனிட்ட பல்கலைக்கழகங்களில் பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகம் உட்பட மூன்று கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் மூடப்படவிருக்கின்றன. தமிழ்மொழிமூலம் கல்வி போதிக்கப்படும் ஒரேயொரு கனிஷ்ட பல்கலைக்கழகம் பலாலியிலுள்ளதுதான். அதை மூடிவிடவேண்டியது அவசியம்தானா?

கனிஷ்ட பல்கலைக்கழகங்களை புனரமைப்புச் செய்வது பற்றி ஆராய்ந்த குழு தெரிவித்த சிபார்சுகளின் அடிப்படையிலேயே மூன்று கனிஷ்ட பல்கலைக்கழகங்களை மூடிவிடுவதென்றும் இதர மூன்று கனிஷ்ட பல்கலைக்கழகங்களையும் மாற்றியமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம். கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் முன்னைய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டவை என்பதற்காக அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்பதல்ல. இவை எந்த அளவுக்குப் பயன்பட்டன; இனி இவற்றை எந்தவகையில் பயன்படுத்தலாமென்பதுபற்றி ஆராய்ந்து அவற்றைப் பயன்படுத்துவதே அறிவுடமையாகும்.

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்தை மூடிவிட்டு அங்கு பயிலும் முதலாமாண்டு மாணவர்களை தெகிவளை கனிஷ்ட பல்கலைக்கழகத்துக்கு அனுப்பவிருக்கிறார்கள். தெகிவளைக்கு இந்த மாணவர்கள் அனுப்பப்பட்டாலும் பலாலியில் கல்வி போதனையளித்த விரிவுரையாளர்கள்தான் அங்கும் விரிவுரையளிக்க வேண்டும். மாணவர்களுக்குத்தான் இதனால் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும், 1970ம் ஆண்டில் இரண்டு ஆண்டுப் பயிற்சியை முடித்து வெளிவரவிருக்கும் இந்த மாணவர்கள் புதிய சூழலினால்

நாதனின் பெயரால் முன்னைய அரசாங்கம் நிறுவியது என்று கூறலாம். அந்தக் கண் துடைப்பு முயற்சியைக் கூட இல்லாமல் செய்வதன் மூலம் முன்னைய அரசாங்கத்துக்கு இன்றைய அரசாங்கம் நல்ல பெயர் வாங்கிக் கொடுக்க முனைந்திருக்கிறதா?

வடக்கிலா கிழக்கிலா புதிய பல்கலைக்கழகம் அமைப்பதென்ற சர்ச்சைக்கு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கிலும் கிழக்கிலும் இரு பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படும் என்று உறுதியளித்ததன் மூலம் முற்றுப் புள்ளிவைத்த கூட்டணியினர். வடக்கில் புதிய பல்கலைக்கழகம் ஒன்றை அமைத்துக் கொடுத்தபின்னர் அல்லது அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட பின்னர் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக்கழகத்தைமூடமுன்வந்திருந்தால் வடபகுதி மக்கள் குறைசொல்ல இடமிருக்காது

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்துக்கு போதிய இடவசதிகளுண்டு. அங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கு இன்னும் பல வசதிகளையும் செய்து கொடுக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. இந்தக் கனிஷ்ட பல்கலைக்கழகத்தைக் கூட சில பெரிய கல்லூரிகளுடன் இணைத்து முழுமையான பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கும் வசதியுண்டு.

வடக்கில் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதென்ற வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளாமலும் மூன்று கனிஷ்ட பல்கலைக்கழகங்களை 'பொலி ரெக்னிக்' என்ற மறுபெயரில் மாற்றும் முயற்சியில் பலாலியையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளாமலும் கல்வி அமைச்சு இந்த முடிவைச்

# டச்சுக்காரரின் சட்டங்கள்
# 'காலனியில் 40 ஆண்டு வாழ்க்கை'

இலங்கையைப் பற்றிச் சுமார் 100 வருடங்களுக்கு முன் சென்னையில் வெளியான ஒரு புத்தகத்தைப் பார்த்தேன். இங்கு தலைமை நீதி அரசராக இருந்த சேர் ரிட்சர்ட் மோர்க்சன் என்பவரின் வாழ்க்கையைப் பற்றிய நூல் அது. டிக்பி என்ற வெள்ளைக்காரர் எழுதியது ''காலனியில் நாற்பது ஆண்டு வாழ்க்கை'' என்ற தலைப்புடன் கூடிய அந்தப் புத்தகத்தில், டச்சுக்காரர் ஆட்சியிலே பிறப்பிக்கப்பட்ட பல சட்ட திட்டங்களில் சில வெளியாகியுள்ளன. நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்!

இலங்கை வாசிகள், தங்களிடமுள்ள அடிமைகளின் எண்ணிக்கையைக் கமிஷனரிடம் தெரிவிக்கவேண்டும். அடிமைகளுக்குப் போர்ச்சுக்கீயர் உதவக்கூடா . உதவினால் கடும் தண்டனை.

ஞாயிற்றுக் கிழமையிலும், விடுமுறை நாட்களிலும் கடைகளைத் திறக்கப்படாது திறந்தால் 6 ரூபாவும், கடைக்குப் பக்கத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் 3 ரூபாவும் தண்டம். (அக்காலத்தில் 3 ரூபாய் பெரிய தொகை.)

அரிசியைத் திருடினாலோ, கறுவாப்பட்டையை வியாபாரத்துக்காக வாங்கினாலோ விற்றாலோ மரண தண்டனை (1659).

சோனகரிடமுள்ள அடிமைகள் சோனகர் போல் தலையில் குல்லாவோ, துணியோ அணியக்கூடாது. அணிந்தால் தண்டனை (1664.)

சோனகருக்கோ, ஹிந்துக்களுக்கோ நிலங்களை விற்கப்படாது.

அனுமதியில்லாமல் தனிப்பட்டவர்கள் வர்த்தகம் செய்யவோ, சாமான்களை இறக்குமதி செய்யவோ கூடாது (1668).

எஜமானர்களிடமிருந்து ஓடிவிட்ட அடிமைகள் பிடிபட்டால் முதல்தடவை அவர்களுக்குச் சவுக்கடிகள் கொடுத்து, சூடுகள் போடப்படும். இரண்டாவது தடவையும் பிடிபட்டால் மரண தண்டனை (1663). எஜமானர்களை விட்டு ஓடிய அடிமை பிடிபட்டால் உடனே அவர்களுக்கு விசாரணையின்றித் தூக்குத்தண்டனை என்று அதே வருடம் மற்றோர் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

சுதேசிகள் எல்லாரும் தங்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிவிடவேண்டும். மீறினால் மூன்று வருடங்களுக்குச் சங்கிலியால் கட்டப்பட்டுக் கடுங்காவல் தண்டனை (1703)

கிறிஸ்தவர்கள் விக்கிரகங்களை வழிபடக்கூடாது. மீறினால் அவர்களுக்குப் பகிரங்கமாகச் சவுக்கடித் தண்டனையுடன் சங்கிலியால் கட்டிச் சிறைப்படுத்தப்படுவர் (1711).

ஐரோப்பியர்களைச் சுதேசிகள் ஏதாவது விதத்தில் அவமதித்தாலும், அவர்களுக்குச் சவுக்கடியும் சூடும் சங்கிலியால் கட்டிச் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் (1713).

இலங்கையிலே செப்புக் காசுகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கொண்டு செல்லப்படாது. சென்றால் அது பறிமுதல் செய்யப்படும் (1714).

றோமன் கத்தோலிக்க சமயத்தை அழிக்க, கடும் சட்ட திட்டங்கள் (1715)

பறங்கிகள் தங்கள் தலைவர்களின் முன் அனுமதியின்றிப் பிற இடங்களுக்குச் செல்லப்படாது (1717)

இலங்கையில் வசிப்பவர்கள் 6 மாதங்களுக்குத் தேவையான விறகைச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும் (1729).

### ஐயாறன் எழுதுவது

ஐரோப்பாவில் உள்ளவர்களுக்கு இலங்கையிலுள்ள டச்சு கிழக்கிந்திய கம்பெனியைப்பற்றியோ அரசாங்கத்தைப் பற்றியோ வர்த்தகம் குறித்தோ யாரும் கடிதம் எழுதப்படாது (1757).

யாரும் மெழுகுவர்த்தி வர்த்தகம் செய்யப்படாது

இந்தச் சட்டங்கள் எப்படி? இச்சட்டங்கள், டச்சுக்காரருக்கு முன்னிருந்த போர்ச்சுக்கீயரின் சட்டங்களைவிட மிகவும் இலேசானவையாம்! அப்படியாயின் போர்ச்சுக்கீயர் ஆட்சி எப்படி?

0 0 0

''இந்துசமயக் கோவில்கள் எல்லாவற்றையும் பெரிய வெறியுடனும், ஆவேசத்துடனும் இடித்துத் தரைமட்டமாக்கினர். இந்து சமயத்தைப் பின்பற்றியவர்களை மிகக் கொடுமையாக நடத்தினர். வடமேற்குப் பகுதிகளில் ஓர் இந்துக் கோயிலும் இல்லாததும், எல்லாம் தரைமட்டமாக்கியிருப்பதையும் இன்றும் பார்த்தால், போர்ச்சுக்கீயர் செய்த அழிவு வேலையை உணரமுடியும்'' என்று கோர்டினர் என்ற ஆங்கில சரித்திராசிரியர் தமது இரண்டாவது புத்தகத்தில் 37வது பக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

இதையெல்லாம் படிக்க' மனம் பதறுகிறது. நம் முன்னோர்கள் இவ்வளவு கொடுங்கோலிலும் எப்படித்தான் வாழ்ந்தார்களோ. மதம் மாறுவிட்டால் தங்கள் சொத்தில் மூன்றில் ஒரு பங்கை இழக்கவேண்டும். இன்னும் எவ்வளவோ எவ்வளவோ!

அத்துடன் ஒப்பிடுகையில் இப்போது நாமெல்லாம் மிக அதிர்ஷ்டசாலிகள் அல்லவா!

0 0

அடிமை உமக்கே
மீளா யாளாய் பிறரை
வேண்டாதே
மூளா தீப்போல் உள்ளே
கனன்று முகத்தால்
மிகவாடி
ஆளாங்கிருக்கும் அடியார்
தங்கள் அல்லல்
சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவா
ரூரில் வாழ்ந்து
போதீரே

—சுந்தரமூர்த்திநாயனார்

## 'எதிரிகள் காருக்குள் என்னை இழுக்க அம்மா, மாமா வெளியே இழுத்தனர்'
### பெண் கடத்து வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை செவ் ''திருவிழா பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த என்னை எதிரிகள் காருக்குள் இழுத்துப்போட்டார்கள். நான் குளறினேன். குளறியதும் எனது வாயைப் பொத்தினார்கள், கண்ணைக் கட்டினார்கள்''

இவ்வாறு வல்வை வாரிக் காட்டைச் சேர்ந்த மகாலிங்கம் தவமணி என்னும் இளம்பெண் பருத்தித்துறை

திறந்து அதற்குள் என்னை ஏறச் சொல்லி கையைப் பிடித்து இழுத்தார், நான் 'அம்மா' என்று குளறினேன். காருக்குள் இருந்த எதிரிகள் என்னை உள்ளே இழு[illegible] அம்மாவும், மாமாவும் வெளியே நின்று இழுத்தார்கள். 4-ம் எதிரி என் காலைப் பிடித்து தூக்கி காரு[illegible] கார்[illegible] ன்ற[illegible] நான் குளறினேன்.

கார் வந்தது. அது வந்ததும் என்னைச் சத்தம் போடவேண்டாம் என்றார்கள். நான் ஒருவாறு தப்பி ஓடி அக்காருக்கு[illegible] ஏறிக்கொண்டேன். பின்னர் யாழ்ப்பாணம் பொ[illegible] சுப்பிரீண்டன் கந்தோருக்குச் சென்றோம். அங்கிருந்து வல்வெட்டித்துறைப் பொலி[illegible] சென்றோம், டாக்டரிடம் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார[illegible].

வலி. மேற்கு

## கயரோக நிவாரண சங்கம்

சுழிபுரம், செவ்வாய்

இலங்கைக்கயரோக நிவாரண தேசிய சங்க வலிகாமம் மேற்குக்கிளையின் பதின்மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கயரோக சம்பந்தமான போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள சங்கங்கள் பாடசாலைகள் வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கு இடையே

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## பத்திரிகை சஞ்சிகைகள் பற்றி இப்படியும் செய்யலாம்

தென்னிந்திய தமிழ்ப் பத்திரிகை, சஞ்சிகைகளின் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கு உத்தேச சந்தா முறையிலும் பார்க்க பின்வரும் வழியை மேற்கொள்வது மிகுந்த நற்பயன் அளிக்குமென்பது எனது கருத்து.

தென்னிந்திய சஞ்சிகைகளை விற்பனவு செய்பவர்கள் இந்நாட்டுச் சஞ்சிகைகளையும் கூடவே விற்பனவு செய்தல் வேண்டும். உதாரணமாக மாதத்திற்கு நூறு ரூபாய்க்குத் தென்னிந்திய சஞ்சிகையை விற்பனவு செய்யும் நிறுவனம் கட்டாயமாக அதே அளவு பெறுமதி வாய்ந்த இலங்கைச் சஞ்சிகைகளையும் விற்பனவு செய்ய வேண்டுமெனத் திட்டம் அமைப்பது நல்லது. அதாவது கல்கியையோ, ஆனந்த விகடனையோ விலைகொடுத்து வாங்குபவர் கட்டாயமாக இலங்கைச் சஞ்சிகையையும் வாங்குதல் வேண்டும். இதனால் இப்பொழுது மாதம் ஒரு தடவை தானும் வெளிவர முடியாமல் திண்டாடும் சஞ்சிகைகள் வாரந்தோறும் வெளிவரும் சூழ்நிலை பிறக்கும். நம் நாட்டுச் சஞ்சிகைகளின் தரமும் சிறக்கும். புதிய வெளியீடுகள் தோன்றும்.

''அறிவுக்குத் தடை விதிக்கப்படுகிறது'' என்னும் அவச் சொல்லும் ஏற்பட மாட்டாது. ஒரேயடியாக வருட சந்தாவைச் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தமும்வாசகர்க்கு ஏற்பட இடமில்லை.

இவ்வாலோசனையைப் பரிசிலனை செய்யும் வண்ணம் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்வதோடு இம்முறை ஏற்கனவே வேறு துறைகளில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பெற்றுப் பயனளித்துள்ளதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

க. கணபதிப்பிள்ளை,
(வித்துவான்,
சைவப்புலவர் பி. ஏ.)
கல்லூரிவீதி,
யாழ்ப்பாணம்.

### படமாளிகைகள்

யாழ். மாநகரசபையினர் யாழ்ப்பாணத்திலுள்ள படமாளிகைகளில் காணப்படும் ஊழல்களை நிர்வாகச் சீர்கேடுகளை ஒழிப்பதற்காக, ஒருமதி அந்தோனியா

யிலேயிருந்த இன்னுமோர் ஆசிரியர் ஒழுங்கு செய்யப் பெற்றார். மற்றைய விஞ்ஞான பாடங்களான உயிரியல், இரசாயனம், பொது விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் இடையீடின்றித் தொடர்ந்து கற்பிக்கப்பட்டன. பௌதிகம் கற்பிக்க ஒரு பட்டதாரி ஆசிரியர் தேவைபற்றி வடமாநில வித்தியாதிபதியுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது இந்நிலையில் எந்த விஞ்ஞான கூடமோ எப்போதோ அடைபட்டுக் கிடக்கவில்லை என்ற உண்மை விளங்கும் எல்லா விஞ்ஞான பாடங்களும் முந்திய அதிபரின் மேற்பார்வையின்கீழ் அமைதியாகவும் அக்கறையுடனும் கற்பிக்கப்பட்டன என்பதற்கு வட்டுக்கோட்டை வட்டார வித்தியாதிகாரியும் மாணவருமே சான்று. எனவே இப்பாடங்கள் அமைதியுடனும் அக்கறையுடனும் இப்போதுதான் நடைபெறுகின்றது என்று செய்தியில் கூறப்பட்டதும் உண்மையல்ல.

பெற்றோர் ஆசிரியர் சங்கம் சில காலமாகக் கூட்டப்படாததற்குக் காரணம், முன்னைய நிர்வாக சபையினர் வித்தியாதிபதியின் நிர்வாகத்தில் தலையிட்டு நிர்வாகத் தொடர்பான விடயம் பற்றி விவாதிக்க முனைந்தபோது, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி வடமாநில வித்தியாதிபதியே உத்தரவிட்டமையே.

சாரணர் இயக்கத்தை நிறுத்தி வைத்ததற்கு கல்லூரி நிதிநிலையே காரணமாகும். பெரிய கல்லூரிகளில் தவணைக்கு இருபது ரூபா வசதிக்கட்டணமாக வசூலிக்கும்போது இக் கல்லூரியின் வசதிக்கட்டணம் தவணைக்கு இரண்டு ரூபாவாக இடையிலே குறைக்கப்பட்டதால், சாரணர் இயக்கத்துக்குப் பணம் கொடுக்கமுடியாது இதன் முயற்சி தடைப்பட்டது.

பெற்றோர்கள்
ந. ஐயாத்துரை,
வ. குணரத்தினம்,
வே. காசிப்பிள்ளை,
ப. மு. விநாயகமூர்த்தி,
தெய்வேந்திரம்.
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தான் இதனால் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும். 1970ம் ஆண்டில் இரண்டு ஆண்டுப் பயிற்சியை முடித்து வெளிவரவிருக்கும் இந்த மாணவர்கள் புதிய சூழலினால் பாதிக்கப்படுவர். பரீட்சையில் சித்தியெய்தத் தவறும் மாணவர்கள் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பை இழக்கக்கூடும். பலாலியில் கல்விபயிலும் மாணவர்கள் பெரும்பாலும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது இவர்கள் தமது பெற்றோரின் கண்காணிப்பில் கல்விபயிலுகின்றனர்.

கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களில் உயர் கல்விபெறும் தமிழ் மாணவர்கள் பெரும்பாலும் வடபகுதியைச் சேர்ந்தவர்களாயிருப்பதாலும் அவர்கள் பலவித கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருப்பதாலும் வடபகுதியில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்கவேண்டுமென்று நீண்டகாலமாகத் தமிழ்ப் பெற்றோரும் மற்றோரும் கோரிவந்தனர் இக்கோரிக்கைக்கு ஒரு கண்துடைப்பாகத்தான் பலாலியில் ஒரு கனிஷ்ட பல்கலைக்கழகத்தை அதுவும் சேர் பொன்னம்பலம் இராமகழகங்களை 'பொலி ரெக்னிக்' என்ற மறுபெயரில் மாற்றும் முயற்சியில் பலாலியையும் ஒன்றுகச் சேர்த்துக் கொள்ளாமலும் கல்வி அமைச்சு இந்த முடிவைச் செய்திருப்பது எவ்வகையிலும் வடபகுதி மக்களைத் திருப்திப்படுத்த இடமில்லை.

பேசாலையிலுள்ள 'பிஸ்' மீன் தொழிற்சாலையை மூடிவிடவேண்டுமென்றும் இவைபற்றி ஆராய்ந்த குழுக்கள் சிபாரிசுசெய்திருக்கின்றன, இந்தச் சிபார்சுகளின் அடிப்படையில் மூடுவிழாக்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் புதிதாக வடபகுதியில், கட்சிக் கிளைகளைத் தவிர வேறு திறப்பு விழாக்களை அரசாங்கம் மேற்கொள்ளாமல் விடுவதும் அமைச்சர்கள் முதல் திரு. அநுரா பண்டாரநாயகா வரை யார்தான் இங்குவந்து தேசிய ஐக்கியம் பற்றிப் பேசினாலும் அது இப்பகுதி மக்கள் மனதில் மட்டுமல்ல இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் மனதிலும் நம்பிக்கையையோ திருப்தியையோ ஏற்படுத்திவிட முடியாது. முன்னைய அரசாங்கம் பேசிய அதே ''தேசிய'' ஐக்கியத்தை இந்த அரசாங்கமும் பேசினால் அதனால் யாருக்கும் பயனில்லை.

பொத்தினார்கள். கண்ணைக் கட்டினார்கள்''

இவ்வாறு வல்வை ஊரிக்காட்டைச் சேர்ந்த மகாலிங்கம் தவமணி என்னும் இளம்பெண் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

ஊரிக்காட்டைச் சேர்ந்த சி. தவராசா, சி.சிவசாமி, க. ஞானசிகாமணி, க.கனகசுந்தரம் ஆகிய நால்வரும் அதே இடத்தைச் சேர்ந்த ம. தவமணிவயது 19என்னும் இளம் பெண்ணைக் கடத்திச் சென்றதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டது.

தவமணி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- சம்பவதினம் அதிகாலை 5, 5 1/2 மணியளவில் நான் நெற்கொழு வைரவர் கோவிலில் திருவிழா பார்த்துவிட்டு தாயார், சகோதரி, மாமன் ஆகியோருடன் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். வீட்டுக்கு அண்மையில் நாம் வந்து கொண்டிருந்தபோது வேலி ஓரமாய் கார் ஒன்று வந்து நின்றது அதற்குள் இருந்த 1-ம் எதிரி கதவைத் திறந்து வெளியே நின்று இழுத்தார்கள். 4-ம் எதிரி என் காலைப் பிடித்து தூக்கி காருக்குள் போட்டார் கார் விரைவாக ஓடிச் சென்றது நான் குளறினேன். வாயைப் பொத்தினார்கள். கண்ணைக் கட்டினார்கள் கடைசியில் கொக்குவிலில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். அங்கு 1-ம் எதிரி தன்னை விவாகம் செய்யும்படி பயமுறுத்தினார். அந்த நேரத்தில் ஊரிக்காட்டிலிருந்து ஒரு ... சுப்பிரின்டன் கந்தோருக்குச் சென்றோம். அங்கிருந்து வல்வெட்டித்துறைப் பொலிசுக்குச் சென்றோம். டாக்டரிடம் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். இதனால் எனக்கு அவமானம் ஏற்பட்டதுடன் என் சகோதரிக்கு ஒழுங்கு செய்து வைக்கப்பட்ட திருமணமும் நின்று விட்டது.

மேல்விசாரணை அடுத்த மாதம் 5-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# ஆழ்கடலில் 3 மணி நேரம் தத்தளித்த 'கருணாதேவி'

(நமது நிருபர் மூ. வ. க. சிவஞானம்)

அனலைதீவு, செவ்.

120 பிரயாணிகளுடன் ஆழ்கடலில் 3 மணித்தியாலங்கள்வரை தத்தளித்த பிரயாணிகள் படகு ஒன்று வேறு ஒரு இயந்திரவள்ளத்தின் உதவியுடன் கரை போய்ச்சேர்ந்த சம்பவம் ஒன்று கடந்த 9ம்திகதி மாலை ஊர்காவற்றுறைக் கடலில் நடைபெற்றுள்ளது.

ஊர்காவற்றுறையிலிருந்து அனலைதீவுக்கு அன்றுமாலை 3 மணிக்குப் புறப்பட்ட அனலைதீவு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்துக்குச்சொந்தமான கருணாதேவி' என்ற படகு நடுக்கடலில் தத்தளித்ததாகவும், அதில் பிரயாணஞ்செய்த பிரயாணிகள் 'அரோகரா' என ஓலமிட்டு மிகவும் அவதியுற்றதாகவும் பின்னர் இயந்திரப் படகொன்று 'கருணாதேவி'யைக் கட்டிஇழுத்துச் சென்று கரைசேர்ப்பித்ததாகவும் கூறப்படுகிறது.

மோட்டார்படகில் அப்போது 120 பிரயாணிகளுடன் சிமெந்துப்பைக்கட்டுகளும் சில்லறை மூடைகளும் இருந்தன அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றியதால் இவ்விதம்நேர்ந்ததாக அதில் பிரயாணஞ்செய்தவர்கள் தெரிவித்தனர். மாலை 3 மணிக்குப் புறப்பட்ட படகு இரவு 6மணிக்கே அனலைதீவைப் போய்ச் சேர்ந்ததாம்

படகுகளில் அளவுடன் பிரயாணிகளை ஏற்றுவதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறு இப்பகுதிமக்கள் தீவுப்பகுதி எம் பி திரு கா பொ இரத்தினத்திடம் முறையிட்டுள்ளதாகத் தெரிகிறது

— —

## 'சிங்களத்தில் காசோலை வருவதில்லை'

கொழும்பு, செவ்வாய்

'பெலியந்தை எம் பி திரு மகிந்தா ராஜபக்சா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது 'தமிழரசுக்கட்சி எம் பி.க்கள் சிங்கள மொழியில் வரும் கடிதங்களை திருப்பி அனுப்பிவிடுவதாகக் கூறிக்கொள்கிறார்கள் ஆனால் சிங்களத்தில் அனுப்பப்படும் காசோலைகளை திருப்புகிறார்கள் இல்லையே' என்று கூறியதாக 'ஈழநாடு' செய்திமூலம் அறிந்தேன்.

'என்னைப் பொறுத்தமட்டில் சிங்களத்தில் வரும்கடிதங்களை திருப்புவது மாத்திரமல்ல ஆங்கிலத்தில்வரும் றசீதுக் கடிதங்களுக்குக்கூட தமிழில்தான் கையொப்பமிட்டுவருகிறேன் சிங்களத்தில் எமக்குக் காசோலைகள் அனுப்பப்படுவதில்லை இதை திரு ராஜபக்சா எம் பி தெரிந்துகொள்ளாமல் பேசியிருப்பதையிட்டு மனம்வருந்துகிறேன்என்று தீவுப்பகுதி எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் எழுதுகிறார்.

— —

## மயிலிட்டி கி. ச. தீர்மானம்

மாவிட்டபுரம், செவ்.

விவசாய நிலங்களுக்கான குத்தகையை வரையறை செய்து விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு சட்டம் ஒன்று ஆட்சிமன்றத்தில் இயற்றவேண்டும் என்று அரசாங்கத்தைத் கோரும் தீர்மானம் ஒன்று மயிலிட்டி கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறியது.

மயிலிட்டி கிராமசபை மாதந்தக் கூட்டத்தில் வ. இராசநாயகம் இப்பிரேரணையைக் கொண்டுவந்தார் தலைவர் திரு கு. தி. இராசதுரை தலைமையில் கூட்டம்நடந்தது.

சம்பந்தமான போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள சங்கங்கள் பாடசாலைகள் வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கு இடையே போட்டிகள் நடைபெறும். போட்டிகளில் கூடிய புள்ளிகளைப்பெறும் பாடசாலைகளுக்கு டாக்டர் பாக்கியநாதர் அத்தனுசியார் வெற்றிக் கிண்ணமும், சங்கங்களுக்கு முனீர்ஸ் வெற்றிக்கிண்ணமும், வைத்தியசாலைக்கு திரு ஜே பி நாகலிங்கம் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளன.

கயரோக அறிவு எழுத்துப் பரீட்சை, புதிர்ப்போட்டி அறிவு மொழிச் சுலோக அட்டைகள் எழுத்துப் போட்டி வில்லுப்பாட்டுப் போட்டி. நாடகப் போட்டி குழுப்பாட்டுப் போட்டி, சுதேசி பாஷனை, பிரசாரக் காட்சி வாகனம் சுலோக அட்டைகள், அணிநடை செய்தல் போட்டி என போட்டிகள் அமையும்

......

## வீதி திருத்தப்பட்டது

எழுதுமட்டுவாள், செவ்

இயக்கச்சிக் கிராமசபையின் 7-ம் வட்டாரமான முள்ளிப்பற்றுக் கிராமத்தில் மிக மோசமான நிலையிலிருந்த கோவில்குடியிருப்பு-கடற்கரைவீதி அரசினரின் உதவி நன்கொடைப் பணம் பெற்று திருத்தியமைக்கப் பட்டது. இவ்வீதி திருத்தப்பட்டதன் மூலம் இதுவரை கொடிகாமத்திலிருந்து கோவில்குடியிருப்புச் சென்றுவந்த பஸ் இனி கடற்கரை வரை சென்று திரும்ப வாய்ப்பேற்பட்டுள்ளது.

## திருமண அழைப்பு

சங்கானை சிவானந்தக் குருக்கள் புத்திரன் செல்வன் பாலசுப்பிரமணிய சர்மாவுக்கு எமது புத்திரி செல்வி இராஜேஸ்வரிக்குஇன்று(16-9-70) பி. ப 2 மணிக்கு சுன்னாகம் சிவன்கோவிலில் திருமணம் நிகழும்- மாலை 4-30மணிக்கு தம்பாலையில் வரவேற்பு நடைபெறும்

உறவினர்களும் நண்பர்களும் இவ்வழைப்பை ஏற்றுக் கொள்ளவும்

இங்ஙனம்
நா. கந்தசாமிஐயர்
தம்பதிகள்
தம்பாலை 2140

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

## படமாளிகைகள்

யாழ். மாநகரசபையினர் யாழ்ப்பாணத்திலுள்ள படமாளிகைகளில் காணப்படும் ஊழல்களை நிர்வாகச் சீர்கேடுகளை ஒழிப்பதற்காக. திருமதி அந்தோனியா சுவாமிநாதர் தலைமையில் ஒரு குழுவை நியமித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதொன்று. இக்குழு சற்றுக் காலந்தாழ்த்தி அமைக்கப்பட்டிருந்தாலும்கூட நன்முறையில் செயற்பட்டு ஊழல்களை ஒழித்து நிர்வாகம் நன்முறையில் இயங்க வழிசமைக்கும் என்ற பூரண நம்பிக்கை உண்டு.

இன்றைய மக்களின் பொழுது போக்குச் சாதனங்களில் சினிமாவும் ஒன்று. அவ்விடத்திலேயே ஊழல்களும் நிர்வாகச் சீர்கேடுகளும் மலிந்திருக்குமானால் பொழுது போக்குச் சாதனம் என்பதன் அர்த்தம்தான் என்ன?

இலங்கையின் இரண்டாவது பெரிய நகரம் யாழ்ப்பாணம்! ஈழத் தமிழர்களின் தலைநகரம் யாழ்ப்பாணம்! அப்பேர்ப்பட்ட இடத்தில்தான், நிர்வாகம் படமாளிககளில் மிகச் சீர்கெட்டுப் போய் கிடக்கின்றனது. இச் சீர்கேடுகள் மிக அவசரமாகவும் அவசியமாகவும் தீர்க்கப்பட வேண்டியன.

யாழ். மாநகரசபை தற்பொழுது இது சம்பந்தமாக அமைத்திருக்கும் குழுவிற்கு யாழ். நகர மக்கள் தங்கள் ஆலோசனைகளையும் புதுத் திட்டங்களையும் எடுத்துக் கூறி அவர்களோடு பூரணமாக ஒத்துழைத்துபடமாளிகைளில் காணப்படும் சீர்கேடுகளை முற்றாகக் களைந்தெறிவதற்கு முன்வர வேண்டும்.

ந. சந்திரமோகன்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## இதுவே உண்மை

'நீண்டநாள் குறை நீங்கியது' என்ற தலைப்பின்கீழ் 6-9-70 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான செய்தியைப் படித்தோம் இது தவறானது; உண்மையற்றது என்பதைவிளக்கவிரும்புகின்றோம்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நீண்ட நாட்களாகவிஞ்ஞானகூடம் அடைபட்டுக் கிடந்தது என்ற செய்தித் தொடக்கமே தவறு இக்கல்லூரியில் பௌதிகம் கற்பித்த ஓர் ஆசிரியர் இவ்வாண்டு மே மாதம் 22-ந் திகதி மாற்றப்பட்டபின் இப்பாடத்தைக் கற்பிக்க இக்கல்லூரி

பெற்றோர்கள்
ந. ஐயாத்துரை,
வ. குணரத்தினம்,
வே. காசிப்பிள்ளை,
ப. மு. விநாயகமூர்த்தி,
தெய்வேந்திரம்.
வட்டுக்கோட்டை.

## சுரங்கத்தை ஆராயட்டும்

சமீபத்தில் காங்கேசன் துறைக்கும் கீரிமலைக்கும் இடையில் உள்ள கிருஷ்ணர் கோவிலுக்கு அருகாமையில் கற்பாறைகளை யந்திரங்களினால் தகர்க்கும்பொழுது சுரங்கம் ஒன்று இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ஏராளமான மக்கள் அங்கு சென்று பார்வையிடுவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இச் சுரங்கம் மூன்று பிரிவுகளாக மாவிட்டபுரம் கீரிமலை மற்றும் கடற்கரையை அண்மித்தும் செல்வதாகவும் சிலர் சொற்ப தூரத்திற்குச் சென்று திரும்புகிறார்கள் எனவும் கூறுகின்றார்கள் இப்படியான ஒன்றைத் தொல் பொருள்பாதுகாப்பாளர் உடனே பாரமெடுத்து அவற்றை ஆராய வேண்டும். ஏனெனில் இவ்வாறே பழங்கால சரித்திரப் பிரசித்தி வாய்ந்த விடயங்களை சுன்னாகம்கந்தரோடையில் நடந்த புதைபொருள் ஆராச்சியால் பலரும் அறிவதற்கு முடிந்தது. மேலும் கடந்த மாதமளவில் பதவியாவிலும் சிவன்பார்வதி விக்கிரகங்கள் கிடைத்திருந்தன கந்தரோடையில் கிடைத்த புதை பொருட்கள் பௌத்த சமயச்சார்புடையது இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் சுரங்கத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஆராய முற்படின் குதிரை முகங் கொண்ட மாருதப்புரவீரவல்லி இளவரசி, நகுல முனிவர் ஆகியவர்கள் காலத்தையதா அன்றி அதற்கு முந்தியதா அல்லது பிற்பட்டதா என்பவை தெளிவாகக்கூடும்,

க. குருநாதன்
தையிட்டி,
காங்கேசன்துறை

## சிரமதானம்

மாவிட்டபுரம் செவ்வாய்

வீமன்காமம் இளைஞர் சங்க சனசமூக நிலைய சிரமதானக் குழு வீமகாமத்திலுள்ள பழுதடைந்த வீதிகளை புனரமைப்பு செய்யும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

யாழ்: பாடசாலைகளில் ஜப்பான் நிபுணர் நடாத்தும்

# வானொலிக்கலை பற்றிய பயிற்சி வகுப்புக்கள்

மாவிட்டபுரம், செவ்.

இலங்கையில் முதல் தடவையாக வானொலிக் கலை பற்றி விளக்கம் கொடுப்பதற்காக ஜப்பான் பேராசிரியர் ராக்ரீ காசி இலங்கை வந்துள்ளார்.

ஐ. நா. சபையின் உதவியுடன் இலங்கை அரசாங்கம் இவரை அழைத்துள்ளது ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வானொலிக்கலை கல்வி போதிக்கும் முறைபற்றி ஆசிரியர்களுக்கு திரு. காசி விளக்கம் அளித்து வருகிறார். 6 மாத காலம் இலங்கையில் தங்கியிருக்கும் இவர் சகல பகுதிகளுக்கும் சென்று வானொலிக்கலை குறித்து விளக்கம் கொடுப்பார்.

யாழ் மாவட்டப் பாடசாலை பௌதிக ஆசிரியர்களை யாழ். இந்துக்கல்லூரி பௌதிக ஆய்வுகூடத்தில் அண்மையில்கூட்டி வானொலிக்கலை குறித்து விளக்கம் அளித்ததுடன் கருவி மூலம் செயல்முறைப் பயிற்சியும் அளித்தார். இத்துடன் வானொலி 'வால்வ்' செய்யும் முறையையும் நன்கு விளக்கினார்.

பாடசாலைகளில் வானொலிக் கலையையும் ஒரு பாடமாக்கவேண்டுமென்ற திட்டத்தின்கீழ் இவ்வித பரீட்சார்த்தம் நடைபெறுவதாக கூறப்படுகிறது

— —

## புதுரக நெல்

எழுதுமட்டுவாள்.செவ்

அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடிய ஒரு புதிய ரக நெல்லை வடபகுதி விவசாயிகளுக்கு விவசாயப் பகுதியினர் வழங்கி வருகின்றனர் இந்தியா, ஜப்பான், சீனா, பர்மா போன்ற நாடுகளில் இந் நெல் நல்ல பலனை அளித்துள்ளது.

## இலக்கியம் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது

கூட்டத்தில் சிறப்புச் சொற்பொழிவாளராக கலந்து கொண்ட வழக்கறிஞர் திரு மு திருநாவுக்கரசு பேசுகையில் இன்றுதோன்றி நாளை மறையக்கூடிய சில சலுகைகளுக்காகத் தமிழ் இனம் தன்னைவிற்கக்கூடாது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கழிந்தபின்பும் ஈழமண்ணில் தமிழ் இனம் தமிழினமாக தனது தனித்தன்மையைப் பேணி வாழவேண்டின் தமிழனுடைய சிந்தனைமிக்க ஆழமுடையதாக இருக்க வேண்டும். எங்களுடைய வருங்கால வழித்தோன்றல்கள் எம்மீது வசைமாரி பொழியும் முறையில் எமது செயல்கள் அமையக்கூடாது'' என்றார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பர் மாதம்(செப்டம்பர்) 16ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org